ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மட[illegible]த்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 - SEP 1949
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

:ப்ரசுரிக்கு மிடம்:

நெ. 2, ஆதியப்ப முதலி தெரு, புரசைவாக்கம்,

சென்னை—7.

[illegible]ஷச் சந்தா: ரூபா 3—0—0

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

			பக்கம்.
1	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் ...	...	224
2	உபய வேதாந்த ஜககண்ட்யம்	...	227
3	நற்போது போக்து (1) ...	...	229
4	நற்போது போக்து (2) ...	...	232
5	ஆசார்யாப்யுதயம் ...	...	237
6	வங்கீபுரம் ஸ்ரீ. உப. ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமியின் நிர்யாணம்	...	239
7	பஞ்சாங்க ஸங்க்ரஹம் ...	...	244
8	செய்திகள் ...	...	245
9	ஸம்பாதகரின் குறிப்புக்கள் ...	...	247

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள் மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்சுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யா-
ஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் [illegible]
வேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் [illegible]
இருக்கிறபடியால், அவர்களுடை நியமநத்தை அவர்க[illegible]
நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருகிறது. அவகாச[illegible]
பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்[illegible]
செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை [illegible]
க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்[illegible]

SEP 1949
MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 8	விரோதி ௵ ஆவணி ௴	ஸஞ்சிகை 8

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாந: ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாக:
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹசரணார்பிதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

189562
சென்னை ... 601 U.3

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(எட்டாம் அங்கம்)

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

நாரதர் :—

" ஸ தஸ்ய ஸம்ஹ்ய தவிவேக விபோ ஹஹாஸ்த்ர
ஸ்ஸோ நாய-மஹஸ்ய ஸமராங்கணஸம்ஹ்ருதேந ।
ப்ராயேண ஸம்ப்ருதி விகல்பிதயா ஸ்வஸ்ய த்ருதா
தோலாயிதோ ஹணஸம் ஸ்ப்ருஹதே ஜயஶ்ரீ: ॥ "

விவேகர் ஸேனைகளும் மஹாமோஹர் ஸேனைகளும் தங்கள் முழு பலங்களையும் திரட்டிக்கொண்டுவந்து போர்க்களத்தில் எதிர்த்து நிற்கின்றனர். யுத்தத்தில் தோல்வியும் ஜயமும் எவருக்கு நேரு மென்று நிச்சயிப்பது கஷ்டம். ஜயலக்ஷ்மிக்கே, இன்னார்தான் ஜயிப்பர், இன்னாரைத்தான் மாலை யிடவேண்டு மென்று நிச்சய மில்லை. ஜயாபஜயங்கள் மாறிமாறி ஸம்ஶயத்தில் வருவதால் அவள் மனமே கலங்கி ஊசலாடிக்கொண்டிருக்கிறது. கல்யாணம் எந்த வரனுக்கென்று திண்ண மாவதற்கு முன்பே இவளுக்கு ஊஞ்சல் நடக்கிறதென்று வேடிக்கை. இவளுக்குச் 'சஞ்சலை' என்ற பெயர் யுக்தமே.

[தூரத்தில் கையால் காட்டி] இதோ த்வந்த்வ யுத்தம் ஆரம்பிக்கப் போகிறது. [த்வந்த்வங்க ளென்பது விரோதியான ஜோடிகளைக் குறிக்கும். ஶீதோஷ்ணம், ஸுக-துக்கம், நன்மை-தீமை இவை த்வந்த்வங்கள். இங்கே 'காமம்-விரக்தி', 'கோபம்-க்ஷாந்தி', 'லோபம்-துஷ்டி' முதலிய த்வந்த்வங்கள் ஒன்றோடொன்று போர் புரிகின்றன.]

" லிப்ஸாக்ஷயாய-ஸ்ய ஸ்லோ-ஹதோ நோஹல-ப்யக:
ஸகுஸுரி தமாயாவஹேத்யகுலஸ்ய ஜவாவம: ॥ "

மஹாமோஹன் படையில் இங்கே லோபன் முதலில் குறிக்கப்படுகிறான். கீதை 14-வது அத்யாயத்தில் முக்குணங்களின் செயல்களும் ஸ்வபாவங்களும் விவரிக்கப்பட்டன. 8-வது ச்லோகத்தில், ஸர்வ ஜீவர்களையும் மோஹிப்பதான 'தமஸ்' என்னும் குணம் அஜ்ஞாநத்தினால் உண்டாகிற தென்பது சொல்லப் படுகிறது. ப்ரமாதம் (கவனக்குறைவு), ஆலயஸ்யம் (சோம்பல்,) நித்திரை (தூக்கத்தன்மை), இவற்றைத் தமஸ் உண்டாக்கி, ஆத்மாவை ஸம்ஸாரத்தில்

கட்டுண்ணப்பண்ணுகிறது. ஞான குணத்தையே ஸ்வபாவ குணமாகவுடைய ஜீவனுக்கு, உள்ளபடி பொருள்களை அறியும் தன்மையை மறைத்துப் பொய்நின்ற ஞானமாகச் செய்கிறது. உள்ளது ப்ரகாசியாமை, தப்பாக ப்ரகாசிப்பது, இவை மஹா மோஹம்; உள்ளபடி ப்ரகாசம் விவேகம். ‘ரஜஸ்’ என்பது ராகத்தை ஸ்வபாவமாக வுடையது. ஒரோர் குணம் ஒரோர் ஸமயத்தில் ஓங்கி நிற்கும்.

‘லோப: ப்ரவ்ருத்திராரம்ப: கர்மணாமஶம: ஸ்ப்ருஹா ।
ரஜஸ்யேதாநி ஜாயந்தே விவ்ருத்தே பரதர்ஷப ॥’

என்பது பத்தாவது ச்லோகம். லோபம் என்பது ஒருவன் த்ரவ்யத்தைக் கொடுக்க மனமில்லாமல் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்கும் சீலம். பதினாறாவது அத்யாயத்தில் தைவ ஸம்பத்தும் ஆஸுர ஸம்பத்தும் விவரிக்கப் பட்டன. தம்பம், தர்ப்பம் அதிமானம், கோபம், நிஷ்டுரத்தன்மை, அஞானம்; ஆகிய இவை ஆஸுர ஸம்பத்து; இவை மஹாமோஹன் படைகள். நூற்றுக் கணக்கான ஆசாபாசங்களால் கட்டுண்டு, காமக்ரோதங்களையே மிகுதியாகப் பற்றிக் காம போகத்தைப் பெருக்க அந்யாய வழிகளில் பணத்தைக் குவிக்க முயற்சி செய்கிறார்கள். ‘இன்று இத்தனை ஸம்பாதித்தாயிற்று; மேலே இதோ இத்தனை அடையப்போகிறேன்’ என்று பணப்பெருக்கையே மனோ ரதம் செய்கிறார்கள். பொருளாசையாகிய இந்தப் பிசாசம், ‘விவித்ஸா வேதாளீ’ என்று தயாசதகத்திலும் இங்கே ஒன்பதாவது அங்கத்திலும் குறிக்கப்படுகிறது. எத்தனை நற்குணங்களிருந்தாலும் அத்தனையையும் லோபம் என்னும் ஒரு துர்க்குணம் அழித்து சோபிக்காமல் செய்யும் என்பர். ஆசை யென்பது லோபனுடைய ரதம். மேலும் மேலும் பொருள் குவிக்கும் மனோரதமே இவன் ரதம். லோபன் ஒரு லுப்தன். [ஹிம்ஸா ஸ்வபாவ முடைய வேடுவன்; ஏகலவ்யனைப்போல இவன் ஓடிவருகிறான்; ஏகலவ்யனைப் போல இவனுக்குக் குருவான த்ரவ்யத்திலே ப்ரிய த்யாகம்.]

தும்புரு:—இவனுக்கு அபிநிவேசன் ஸாரதி.

நாரதர்:—[தமக்குள் சிரித்துக்கொண்டே]

“ஸ விஶ்வமபி காஞ்சநம் [illegible] ।
[illegible] வ்ருத்தி குணநா[illegible] ஆய: ॥”

உலகம் முழுவதையுமே தங்கமாக மாற்றி அது முழுவதையும் இவன் கையில் கொடுத்தாலும், இவன் அதை வட்டிக்கு விட்டுப் பன்மடங்காகப் பெருக்க ஆசைப்படுவான். பணத்தை வெளியே கடன்கொடுத்து ஏடுகளில் அதன் வட்டிப் பெருக்கைக் கணக்கிட்டுக்கொண்டே மகிழ்வான். [‘வ்ருத்தி’, குணநம், ஆய:’ என்று பல பெருக்கல் பதங்கள்.]

தும்புரு.—எத்தனை தடவை விவேகனால் தோற்கடிப்பட்டாலும் இவன் ஆசை வளர்கிறது. ஆசைப்படுவதே இவனுக்கு உயிர்.

நாரதர்:—ஆச்சர்யம்! ஆச்சர்யம்! பட்டப்பகலில் சந்த்ரிகை பரவுகிறது. ஓர் உயர்ந்த தெய்வப் பெண்மணி இங்கே தோன்றியிருக்கவேண்டும். [ஸூக்ஷ்மமாகக் கவனித்து நோக்கி] தெரிந்தது! தெரிந்தது!

“ வைஷா வ்ருத்தி துஷ்டி ஸ்லோஷஸ்ரஷிரிவாவசா ।
கதகிருதசவஷூாய ஹ ஸதே ஜோஹஸ்ஷிகழ ॥ ”

‘துஷ்டி’ என்னும் பெண்ணால் லோபன் கவ்வப்பட்டு விழுங்கப்படுகிறான்; ஐந்து தலை ஸர்ப்பத்தால் பெருச்சாளி கவ்வி விழுங்கப்படுவதுபோல. துஷ்டி என்பது த்ருப்தி. யத்ருச்சையாகக் கிடைத்ததைக் கொண்டு த்ருப்தி. யத்ருச்சை யென்பது ஈச்வர ஸங்கல்பம். அவன் இச்சைப்பட்டுக் கொடுத்தது போதும். நம் இச்சை யென்பதே கிடையாது. ‘ஆசை’ என்பது தாப ஜ்வரத்தைப்போலத் தஹிப்பது. த்ருப்தி என்பது இடைவிடாமல் மனதிற்கு ஸந்தோஷத்தையும் குளிர்ச்சியையும் தருவது. ஆசை என்னும் தாப ஜ்வரத்தை அடியோடு தணிப்பது. இப்பெண்ணால் ‘லோபன்’ என்னும் எதிர்வீரன் வீழ்த்தப்படுகிறான். லோபன் ஒரு பெருச்சாளி. பெருச்சாளி வீட்டுச் சுவர்களிலும் தரைகளிலும் மண்ணைப் பறித்துப் பெரும் பொந்துகளைச் செய்வது போல, லோபனும் மண்ணைப் பறித்துக் குழிகள் செய்து அவைகளில் பணங்களைப் புதைத்து வைப்பான். பெருச்சாளிகள் பறித்து ஏற்படுத்திய பொந்துகளில் பாம்புகள் புகுந்து வஸிக்கும். அங்கேயே பெருச்சாளியைக் கொல்லும். இங்கே பாம்பு என்பது துஷ்டியைக் குறிக்கும் அஜகர வ்ருத்தாந்தத்தையும் ஸூசிக்கிறது.

“ ஹ்ராஸம் ஸம்ஷ்ரஷ்டம் விரஸம் ஈஹாஜம் ஷோகஸெவ வா ।
யத்ருஜ்ஞயைவாவதிதம் ஹ ஸதாஜஹஜோக்கியः ॥ ”

என்று (ஸ்ரீபாகவதம் ஏகாதசத்தில்) அவதூதர் யதுவினிடம் அஜகரத்தினிடமிருந்து அதன் ஸ்வபாவமாகிய யத்ருச்சா லாப த்ருப்தியை உபதேசமாகத் தெரிந்துகொண்டதைக் கூறினர். ரஹஸ்யத்ரய ஸாராதிகளிலும் அஜகரோபாக்யாநம் உதாஹரிக்கப்பட்டுள்ளது. ‘யத்ருச்சாலாபஸந்துஷ்டः’ என்று கீதை. துஷ்டி மிக துர்லபம். வித்யாரண்யம் பஞ்சதசியில் ‘துஷ்டிதீப’ மென்று ஒரு ப்ரகரண மமைத்தார். அத்யாத்ம ஜ்ஞாநத்திற்கு அது முக்ய ஸாதநம்.

தும்புரு:—[மகிழ்ச்சியுடன்] இந்த லோபன் தொலைந்ததும் உலகத்தில் விஸ்தாரமாக (ஆயதமாகப்) பரவியிருந்த சார்வாக மதமே கண்காணமல் போய்விட்டதுபோல் இருக்கிறது. கீதையில் பதினாறுவது அத்யாயத்தில் ‘காமமாஸ்ரித்ய துஷ்பூரம்’ என்று நாஸ்திகர் பூரணம் செய்ய அஸாத்யமான பேராசையைக் கைப்பற்றி,

“ இதமத்ய மயா லப்தம் இமம் ப்ராப்ஸ்யே மநோரதம் ।
இதமஸ்தீதமபி மே பவிஷ்யதி புநர்தநம் ॥ ”

என்று மேலும் மேலும் ஆசைப்படுவது வர்ணிக்கப்பட்டது. ‘நரகத்திற்கு த்வாரங்கள் மூன்று; அவை காமம், க்ரோதம், லோபம். அவை ஆத்ம ஸ்வ

ரூபத்திற்கு ஶத்ருக்கள். அவற்றை அடியோடு தொலைக்கவேண்டும்' என்று அந்த அத்யாயத்தில் மேலே கூறியதை அநுஸரித்து, இங்கே இந்த குணப் போரில் இம்மூன்றையும் ஜயிக்கவேண்டிய முக்ய வீரர்களாக வர்ணிக்கப் படுகிறது. 'ஷுஶஷ்தஂவிஜஷி' என்கிற ஸுபாஷிதநீவீ ச்லோகம் இந்த விஷயத்தில் படிக்கப்படுகிறது.

"ஷுஶஶிதஜொஹஶிஷாநீஂ ஷுஜஷிவிவெகஷுயஷுயாதஂஷஃ ।
யநஜநவநீதிஶிஷுஂ ஜாதஂ ஶவஉஶுஶதஶுஹமுஂ ॥"

லோப மடங்கி விவேகருடைய ப்ரபு ஶக்தியான த்ருப்தி பரவி த்ரவ்யங்களை ஸத்பாத்ரங்களில் கொடுப்பதாலும், உசிதமாய் அநுபவிப்பதில் செலவிடுவதாலும் நன்கு விநியோகம் பெறுகிறது. [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதெ ஶுகூ நுஸிஂஹவரஶஹுணெ நமஃ

உபய வேதாந்த ஜககண்ட்யம்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி]

முதல் ஸூத்ரத்தின் ஸ்ரீ பாஷ்யப் பொருள் ஆர்ஷமான ஆதி போதாயந வ்ருத்தியை அநுஸரித்து, 'ருஷியின் அபிப்ராயத்தை ருஷியேதான் அறியக் கூடும்' என்று ச்ருதப்ரகாஶிகை. வ்யாஸ மஹர்ஷியின் ஸூத்ரத்தின் கருத்தைப் போதாயந மஹர்ஷி அறிவர்; சடகோப முனியு மறிவர். 'ஷிஂஜுஷா உஹெ' என்று பட்டர் புகழ்ந்த ருஷி. ஸ்வர்க்க மென்பது எல்லோரும் ஆசைப்படத்தக்க ஸர்வோத்க்ருஷ்டமான ஸுகம் என்று கர்ம மீமாம்ஸகர்கள் அதில் ஆசைப்பட்டு அவன் ஸாதநங்களான ஜ்யோதிஷ்டோமம் முதலிய ப்ரயோஜநத்தைக் கருதிய கேவல கர்மங்களான தர்மங்களைப் பல அத்யாயங்களால் ஆயிரம் அதிகரணங்களால் விசாரித்து, அந்தக் கேவல கர்ம ஸ்வரூபங்களை விஸ்தாரமாய்த் தெரிந்துகொண்டு மிக்க க்லேஶத்துடனும் பஹு த்ரவ்ய சேகரிப்புடனும் அநுஷ்டாநம் செய்து தேஹம் விழுந்தபிறகு ஸ்வர்க்கத்தைப் பெற ஆசைப்படுவர்.

'ஹதெ வெ நிஶயாஷாத ஷொநஷு வஶஶாதநஃ'

என்ற ஶாந்தி பர்வ வசநப்படிக்கும்,

'கிஙஷகாஉவிஶுஶிதாஷுததாஂ விஶாநாக'

என்ற ஸ்ரீபாகவத ச்லோகப்படிக்கும், 'நம் செய்கைகளான ஸுக்ருதங்களெல்லாம் அநித்ய மென்கிற ந்யாயத்தை ஆதரித்து, கர்ம ஸம்பாதிதமான பயன்களைப்போல் புண்ய ஸம்பாதிதமான பரலோக ஸ்வர்க்காதி போகங்களும் அழிகின்றனவே' என்று கூறும் ச்ருதியும் ப்ரஹ்ம ப்ராப்தியும் அதன் ஸ்தாந ப்ராப்தியும் திரும்புவ தென்கிற அநித்யத்வ மில்லாத நித்யமும் ஒப்

பற்றதுமான 'நலம்' என்பதையும் 'உயர்வற வுயர்நலம்' என்பதால் ஸ்பஷ்டமாகத் தெளிவிக்கிறார். மற்ற உயர்வுகளெல்லாம் ப்ரஹ்மமென்னும் உயர்நலத்தை அபேக்ஷித்து 'நிரயமண த-ூமாரொவணழ' என்று ஸாராவளி யின் வைராக்ய பாதத் தொடக்கத்தில் காட்டியபடி வெகு நரக ஸமாநமே; அவற்றின் ஸுகம் அல்பமும் அஸ்திரமுமே என்கிற நிச்சயம் தர்ம மீமாம்ஸை செய்து முடித்தவனுக்கு ஏற்படுவதையும், ப்ரஹ்மமென்கிற எல்லையற்ற இன்பப் பொருளின் ப்ராப்தியையும் அதன் ஸ்தாந ப்ராப்தியையும், மயர் வற்ற ஒப்பற்ற ஜ்ஞாநாநந்தங்களையும் அந்தமில் பேரின்பத்து அயர்வறு மமரர்களோடு ஶாச்வதமாகக் கூடியிருந்து ப்ரஹ்மத்தின் சுடரடிச் சாயையில் (வாஸுதேவ தருச் சாயையில், ஹரிசந்தநச் சாயையில்) இன்புறுவதையும் இங்கே பணிப்பதால்,

"பூர்வபாகாவகத கர்மணாம் அல்பாஸ்திரபலத்வாத்
உபரிதநபாகாவஸேயஸ்ய ப்ரஹ்மஜ்ஞாநஸ்ய அநந்தாக்ஷயபலத்வாச்ச பூர்வ-
வ்ருத்தாத் கர்மஜ்ஞாநாத் அநந்தரம் தத: ப்ரஹ்மஜிஜ்ஞாஸா கர்தவ்யம்
பவதி"

[பூர்வ மீமாம்ஸா பாகத்தால் கேவல கர்மங்கள் நீடிக்காததுப் கொஞ்சமுமான பயன்களைமட்டும் கொடுப்பனவென்று நிச்சயமாகத் தெரிந்துகொண்டபடி யாலும், வேதத்தின் மேல்பாகத்தால் ப்ரஹ்மத்தின் ஜ்ஞாநம் அளவற்ற நித்ய பலன்களைக் கொடுக்குமென்று கொஞ்ச மறிந்தபடியாலும், முதலில் செய்யப் பட்ட கர்ம விசாரத்திற்குப் பிறகு முதலில் கர்ம விசாரம் செய்து முடிந்தபடி யாலேயே ப்ரஹ்ம விசாரம் ஆரம்பிக்கத்தக்கது.]

என்று ஸ்ரீ பாஷ்யத்தில் முதல் அதிகரணத்தில் ஸாதித்த ஸூத்ரப் பொருள் கள் ஆழ்வார் இங்கே இப்பாசுரத்தின் முதலடியாலும் மற்ற அடிகளாலும் விளக்கினதே. 'க்லேஶம்' 'உயர்த்தி' என்ற இரண்டு பொருள்களையுமுடைய 'உயர்வு' என்னும் பதத்தை முதல் முதலில் ப்ரயோகித்தால் மற்ற மூர்த்திகள் மற்ற தேவர்களின் உயர்வெல்லாம் அவர்களுக்கு ஸ்வாபாவிக மல்லவென்றும், அநேக யஜ்ஞங்கள் நீண்ட தவங்கள் முதலிய க்லேஶங்களைக் கைப்பற்றிப் பகவத் ப்ரஸாதத்தால் ஸம்பாதிக்கப்பட்டதென்றும், அவர்களுடைய ஒளியெல் லாம் பகவானுடைய ஸ்வபாவச் சுடரான அநுபாநமே ப்ரதிபிம்ப ஒளியே யென்றும், பகவானுடைய தேஜோம்ஶத்தினால் கிடைத்ததே யென்றும், பயன் களை உத்தேசித்த யாகம் முதலிய கர்மங்களால் கிடைக்கும் ஸ்வர்க்கம் முதலிய உயர்வுகள் மிக்க ஆயாஸத்தால் ஸம்பாதிக்கப்படுவதுமன்றித் துக்கங் கலந்ததும் அல்பமுமே யாகுமென்றும், இத்தனை பொருள்களும் இம்முதல் பாசுரத்தால் அதிநிபுணராய் ஸூசிக்கப்படும் அழகு ஆச்சர்யமே. முதல் ஸூத்ரத்திற்குப் போதாயந வ்ருத்தியும் ஆழ்வாரும் காட்டிய பொருளையே ஸ்ரீபாஷ்யம் விஸ் தரித்தது. இரண்டா மடியால் பகவானுடைய அருளால்தான் எல்லாப் பலன் களும் கிடைக்கக்கூடியதென்றும், மோக்ஷோபாயமான இன்ப வெள்ள பகவத் பக்தி யோகம் ஈச்வரனுடைய அருளின் ஸஹகார மென்னும் ப்ரதாந ஹேது வால்தான் கிடைக்கு மென்பதையும், மூன்று மடியால் ஸ்வர்க்கம் முதலிய

உயர் போகங்களிலுள்ள அமரர்களும் அவர்கள் அதிபதிகளும் அயர்வற்றவ ரல்ல ரென்றும், அவர்கள் ஐச்வர்யம் அமரமல்ல வென்றும், அவர்கள் ஸர்வாதி பதிக ளல்ல ரென்றும் அவர்க ளெல்லாம் பகவானுக்கு அடியரும் உடலுமே என்றும், நான்கா மடியால் கேவல கர்மங்களால் கிடைக்கும் ஸ்வர்க்கம் முதலிய உயர்வுகள் துயரே என்றும், அவை (பாதம் என்னும் வீழ்வை) உடையனவேயல்லாது உண்மையான எழுச்சி யல்லவென்றும் காட்டி, முதல் ஸூத்ரத்தின் கருத்துகளை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவிக்கிறார். 'அத:' என்கிற ஸூத்ர நடுப் பதத்திற்கு 'ப்ரயோஜந ஆசையைத் துறந்து பக்தி யோகாங்கமாக அநுஷ்டிக்காமல் ப்ரயோஜநத்தை ஆசைப்பட்டுக் கர்மடர்கள் செய்யும் பூர்வ மீமாம்ஸா நிர்ணீதமான கேவல கர்மங்களின் பயன்க ளெல்லாம் அல்பமும் அஸ்திரமுமே என்கிற நிச்சய ஜ்ஞாநத்தோடும் அந்தப் பயன்களில் வைராக்யத்தோடுங் கூடி எல்லையற்றதும் ஸுக மயமுமான ப்ரஹ்ம மென்னும் ஆநந்த ஸ்வரூப ஆநந்த குணகப் பொருள் விஷயமான மேல் ஜ்ஞாநத்தை (ஆபாதப்ரதீதியை) வேத ஶிரஸ்ஸுகளான வேதாந்தங்களோடு கூடிய வேதங்களையும் நிருக்த வ்யாகரணப் முதலிய வேதாங்கங்களையும் முன்பே அத்யயநம் செய்திருப்பதால் தெரிந்துகொண்டு ஸம்ஸாரத் துயரை அடியோடு அறுக்கவும் ப்ரஹ்மப் பேரின்பத்தை ஶாச்வதமாய்ப் பெறுவதில் ருசி பிறந்து, அதற்கு ஸாதநமான அவன் சுடரடி தொழும் இன்பத்தில் ஆழ்ந்து பரம ப்ராப்ய இன்பமான அவன் சுடரடியின் நிழலிலே நித்யஸேவையைப் பெறுகிறான். 'அவன் சுடரடி தொழுதெழு' என்று 'அவன் திருவடிகளைத் தொழுது உஜ்ஜீவி' என்று 'ஜிஜ்ஞாஸாஹேது நிர்ணயகாய தாத்பர்யேண' ஜிஜ்ஞாஸா ஶப்தார்த்தத்தை ஸூசிப்பதாலும், இச்சந்தை முதல் அதிகரணத்தின் விளக்கம்' என்று ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமி. [தொடரும்]

ஜிஜ்ஞாஸாதிகரண விளக்கம் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீஶடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேஶிகாய நம:

நற்போது போக்கு

[ருபு நிதாகோபாக்யாநம்]

(1.)

[ஸ்ரீ. உப. K. ஸுதர்ஶநாசார்யர், தமிழ்ப் பண்டிதர், பெருமாள்கோவில்]

பூர்வத்தில் பரமேஷ்டிக்கு ருபு என்னும் குமாரர் அவதரித்தார். அவர் ஸ்வபாவத்திலேயே தத்வ ஜ்ஞாந முடையவர். அவருக்கு நிதாகர் என்னும் ஶிஷ்யர் ஒருவர் இருந்தார். இவர் புலஸ்த்ய ப்ரஹ்ம ரிஷியின் புதல்வர். இந்த நிதாகருக்கு ருபு முனி ஸகல ஶாஸ்த்ரங்களையும் கற்பித்து ஞானத்தை உண்டாக்கினார். நிதாகர் தமது ஆசார்யனிடம் ஸகல கலைகளையும் அப்யஸித்தும், அவருக்கு 'ஆத்ம ஸ்வரூபத்தில் பேதமில்லை' என்னும் ஞானம் மாத்ரம் உண்டாகவில்லை. இதை அந்த ருபு மஹா முனி அறிந்து அதனைத் தம் ஶிஷ்யனுக்கு விளக்கி உபதேஶிக்கவேணு மென்ற எண்ண முடையவராய், பலகாலங் கழித்து

நிதாகருடைய க்ருஹத்தை அடைந்தார். அப்போது நிதாகர் தேவதாராதந வைச்வதேவ கர்மாக்களை முடித்து, 'அதிதிகள் யாரேனும் வருவார்களோ?' என்று வாசலில் வந்து பார்த்தார். அத்தருணத்தில் ருபு மஹா முனி அங்கு வந்திருப்பது கண்டு, அர்க்யபாத்யாசமநீயாதி ஸகலோபசாரங்களுடன் அவரை உள்ளே அழைத்துச் சென்று ஆஸநத்தில் எழுந்தருளச் செய்து, 'ஸ்வாமீ! அமுது செய்தருளல் வேண்டும்' என்று ப்ரார்த்தித்தார். அந்த முனிவர் நிதாகரை நோக்கி,

"ப்ராஹ்மணோத்தமரே! உம்முடைய க்ருஹத்தில் நான் புசிக்கத்தக்க பொருள் என்ன இருக்கிறது? ஹீநமான போஜநத்தில் எனக்கு ப்ரிய மில்லை" என்றார்.

நிதாகர்:—"ஸ்வாமி! அரிசி மாவு, யவ தாந்யம், இவைகளால் செய்யப்பட்ட பலஹாரங்கள் யதேஷ்டமா யிருக்கின்றன; சித்ராந்நங்கள், காய் கனி கிழங்கு வகைகள், அப்பங்கள்—இவை ஏராளமா யுள்ளன; இவைகளில் எதெது திருவுள்ளமோ அவற்றை அமுதுசெய்தருளலாம்" என்றார்.

ருபு முனி:—"ப்ராஹ்மணரே! இவைகள் ஒன்றிலும் எனக்குப் ப்ரிய மில்லை; இவை அல்பாஹாரங்கள். மோர்க்குழம்பு, தேன்குழல், பாயஸம், அதிரஸம் முதலிய மதுராந்நங்களை எனக்கிடும்" என்றார்.

நிதாகர்:—'ஸ்வாமீ! அப்படியே ஆகட்டும்' என்று சொல்லித் தம் பார்யையைப் பார்த்து, "பெண்ணே! நமது க்ருஹத்தில் உள்ள ச்ரேஷ்டமான உணவுப்பொருள்களைக் கொண்டு, ஸ்வாமிக்குத் திருவுள்ளமான மதுர பதார்த்தங்களை யெல்லாம் பண்ணிப் பரிமாறு" என்றார். உடனே அவளும் தன் பர்த்தாவின் நியமநப்படி தேன்குழல் அதிரஸம் அக்காரவடிசில் முதலிய மதுராந்நங்களைச் செய்து முனிவர்க்குப் பரிமாறினாள். முனிவர் அவற்றை அமுது செய்தார். அப்போது நிதாகர் முனிவரை நோக்கி, "ஸ்வாமீ! பதார்த்தங்கள் தேவரீர் திருவுள்ளத்துக்குப் போக்யமாயும் பாங்காயும் இருக்கின்றனவா? இவைகளை அமுது செய்ததனால் தேவரீர் திருவுள்ளத்துக்கு த்ருப்தியும் ஸந்துஷ்டியும் உண்டாயினவா? தேவரீர் எழுந்தருளியிருக்கு மிடம் எது? எங்கிருந்து எழுந்தருள்கிறது? இங்கிருந்து எங்கே எழுந்தருள்வதாக உத்தேசம்? விளங்க அருளிச் செய்யவேண்டும்" என்று ப்ரார்த்தித்தார். ருபு முனிவர் சொல்லத் தொடங்கினார்:—

"நிதாகரே! எவனுக்குப் பசியோ அவனுக்கு அந்நம் புசிப்பதனால் பசி யடங்குகின்றது; த்ருப்தி உண்டாகிறது. எனக்குப் பசியில்லை. 'த்ருப்தி உண்டாயிற்றா?' என்று ஏன் கேட்கிறீர்? ப்ருதிவீ ஸம்பந்தமான தாதுக்கள் ஜாடராக்கியினால் தஹிக்கப்பட்டால் பசியும், வயிற்றழலால் உள்ளிருக்கும் நீர் வற்றிப்போனால் தாஹமும் உண்டாகின்றன. இவை இயற்கையான தேஹ தர்மங்கள். எனக்கு இவைகள் இல்லை. 'மநஸ் ஸந்துஷ்டி யடைந்ததா?' என்று கேட்டீர். துஷ்டியாயிருப்பதும் துன்ப முடைதலும் மனத்தின் செயல்களா

தலால் நீர் அதனையன்றோ கேட்கவேண்டும்? என்னை ஏன் கேட்கின்றீர்? ஆத்மாக்களுக்குப் பசி தாஹங்கள் இல்லை என்று முதலில் தெரிந்து கொள்ளும். அடுத்தபடி 'வாஸஸ்தாநம் எது? எங்கிருந்து வருகின்றீர்? எங்கே போகின்றீர்?' என்று ப்ரச்நம் பண்ணினீர். அதற்கு உத்தரம் சொல்கிறேன்.

'ஆத்மா தேவ மநுஷ்யாதி ஸகல சரீரங்களிலும் இருக்கத்தக்கவன்; ஸகல அசேதநங்களிலும் வ்யாபிக்கத் தக்கவன்; ஆகாஶத்தைப்போல் ஒன்றோடும் ஒட்டாதவன். இப்படிப்பட்ட ஆத்மாவைப் பார்த்து 'நீ எங்கிருக்கின்றாய்? எவ்விடத்திற்குப் போகின்றாய்? எங்கிருந்து வருகின்றாய்?' என்று கேட்கும் கேள்விகளுக்கு அர்த்தமே யில்லை. ஆகையால் 'நான் ஓரிடத்திலிருந்து வ்ருகிறவனு மில்லை; ஓரிடத்துக்குப் போகிறவனு மில்லை; ஓரிடத்தில் இருப்பவனும் அல்லேன். நான் மாத்ரமல்ல. உலகில் யாவரும் அப்படியே. ஆனால் போவதும் வருவதும் இருக்கிறதுமாக உமக்குத் தோன்றுகிறதே! அதற்கு என்ன காரணம் தெரியுமா? ஆத்மா தேஹத்தை ஆச்ரயித்து அதன் வசப்பட்டிருக்கிறது. அதுதான் காரணம். இதனை நீர் நன்றாக அறிந்து கொள்ளும். ஆகையால் போக்கு வரவுகளுக்குக் கர்த்தாவாகக் காணப்படும் இந்தத் தேஹம் நானன்று. நீரும் நீரன்று. மற்றவரும் மற்றவ ரல்லர். ஆனால் சற்று முன்பு நான் உம்மை 'அல்பாஹாரம் வேண்டாம்; உயர்ந்த மதுரமான அந்நம் படையும்' என்று கேட்டேனல்லவா? அப்படி நான் உம்மைக் கேட்டது, எனது ஸ்வபாவ ஸித்தத்தாலா? உபாதியினாலா! என்பதை நீர் கண்டறியும் பொருட்டுக் கேட்டேனேயன்றி, நிஜமாய் உம்மைக் கேட்கவில்லை. இவ்விஷயத்தைச் சிறிது விளக்குகிறேன்.

உண்கின்றவனுக்கு, தன்னால் உண்ணப்படும் பொருளில் 'இது ருசியுள்ளது, இது ருசியில்லாதது' என்ற நியதி கிடையாது. யாதொரு வ்யாதியும் இல்லாமல் நல்ல பசியுள்ளவனுக்குத் தாழ்ந்த உணவுகளும் ருசிகரமாகவேயிருக்கும். அப்படி யின்றி, வ்யாதி யுள்ளவனுக்கும் பசி யில்லாதவனுக்கும் தேன்குழல் அக்கார வடிசில் முதலிய உயர்ந்த பதார்த்தங்களும் ருசிகர மில்லாமற்போம். ஆதலால் உண்பவனுடைய உடம்பின் தன்மையை யொத்து, உணவுகளிலும், ருசியும் அருசியும் உண்டாகின்றன. இதனால், 'மதுர மென்பதும் அமதுர மென்பதும் ஔபாதிகமே யல்லது ஸ்வாபாவிக மன்று' என்பது தெள்ளிதில் விளங்குகின்ற தல்லவா? மண்ணாற் கட்டிய வீடு மண்ணாலேயே பூசப்பட்டு உறுதி யடைதல்போல, ப்ருதிவி மயமான இந்தத் தேஹமும் ப்ருதிவி ஸம்பந்தமான பொருள்களாலேயே உறுதியாக வேண்டி யிருத்தலால் ஶரீரத்துக்கு உணவு அவச்யமாக வேண்டி யிருக்கிறது. 'இது இனிப்பு, இது இனிப்பன்று; இவன் தேவன், இவன் மனிதன்' என்று பேத விசாரணை செய்கிறது மநஸ். இது கர்மத்தினால் வந்த விகாரமேயன்றி, ஆத்ம ஸ்வரூபத்தில் யாதொரு வைஷம்யமு மில்லை. இப்படிப்பட்ட ஸமத்வ புத்திதான் யாவர்க்கும் இருக்கவேண்டும். இந்த ஸமத்வ புத்தியே மோக்ஷ காரணமாகும்" என்று சொல்லி முடித்தார்.

அந்த நிதாகர் தம் குருவின் உயர்ந்த உபதேஶ மொழிகளைக் கேட்டு அதிஸந்துஷ்டராய்க் குருவைத் தண்டன் ஸமர்ப்பித்து, "ஸ்வாமீ! அஜ்ஞானம் நீங்கித் தெளிவுற்றேன். அடியேற்கு ஹிதத்தைப் போதிப்பதற்கென்று இங்கு எழுந்தருளின தேவரீர் யாரோ தெரியவில்லை" என்று விண்ணப்பம் செய்ய, "நிதாகரே! நான் உமது குரு; உமக்கு ஞானத்தைப் போதிக்க வேண்டி உம்மிடம் வந்தேன்; பரமார்த்தமான ஹிதத்தைப் போதித்தேன். சுருக்கமாய் ஒன்று கூறுகிறேன். தேவ மநுஷ்யாதி பேதமாய்க் காணப் படுகிற சேதந ஸ்வரூப மெல்லாம் ஒன்றே யல்லாமல் பேதப்பட்டதன்று. தேவ மநுஷ்யாதி ரூபமாய்க் காணப்படுகின்றவைகள் யாவும் கர்மவஶத்தினுல் வந்த விகாரங்கள். சேதநாசேதநாத்மகமான ஸகல ப்ரபஞ்சமும் ஸ்ரீ வாஸு தேவனுடைய திருமேனி; இதுதான் பரமார்த்தம். இதை நன்ருய் மனத்திற் கொள்ளும்" என்று சொல்லி ருபு மஹா முனிவர் தம் இருப்பிடம் அடைந்தார்.

* * * * *

ஸ்ரீ:

நற்போது போக்கு

(2)

[ஸ்ரீமதி ஸௌந்தர்யவல்லி அம்மாள், பிராமணத் தெரு, சைதாப்பேட்டை]

[தோட்டத்தில் ஒரு கற்பாறை; அதில் ஸுமதியும் ஸுகுணவும் பேசிக் கொண்டிருக்கிருர்கள்.]

ஸுமதி.—அடீ ஸுகுண! இப்போது வரவர எனக்கு வெட்டிப்பேச்சு வம்பளப்பு ஒன்றும் பிடிக்கவில்லையடீ. பகவத் குணங்களை இன்றைக்கெல் லாம் பேசிக்கொண்டிருக்கலாம். அதில் அலுப்பு சலுப்பு இராது. 'ஸஹொஷாய-ம் விஶுஶதிஃஹஸஹிரயஹூர்தூவிஷூரம்' என்று ஸ்ரீ தேசிகன் ஸாதிக்க வில்லையா?

"கார்கலந்த மேனியான் கைகலந்த வாழியான்
பார்கலந்த வல்வயிற்ருன் பாம்பணையான்—சீர்கலந்த
சொன்னினைந்து போக்காரேல் சூழ்வினையி ஞழ்துயரை
என்னினைந்து போக்குவ ரிப்போது?"

என்று ஸ்ரீ சடகோபன் போதுபோக்குவதற்கு வழிகாட்டி யிருக்கவில்லையா?

"......................................அடியேன் நான்
உண்ணு நாள்பசி யாவதொன் றில்லை யோவா தேநமோ நாரண வென்
றெண்ணு நாளு மிருக்கெசுச் சாம வேத நாண்மலர் கொண்டுன பாதம்
நண்ணா ளவை தத்துறு மாகி லன்றெ னக்கவை பட்டினி நாளே"

என்று பெரியாழ்வார் பணித்திருக்கவில்லையா? இவை யாவற்றையும் ஆசார்ய முகமாகக் கேட்டும் நேரில் படித்தும் பார்த்த பிறகு, வெட்டிப்பேச்சு வம் பளப்புகளே எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லையடி! 'உண்ணும் சோறும் பருகு நீர் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ணன்' என்ற அத்யவஸாய முடையவர்கள் வேறு ஏதேனும் பேசுவார்களா?

[இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது எதையோ நினைத்தவள்போல் ஸுமதி கலகலவென்று சிரித்துவிட்டாள்.]

ஸுகுண.—திடீரென்று சிரிப்புக்கு என்னடீ காரணம்? ஒன்றும் விளங்க வில்லையே! எனக்கும் கொஞ்சம் சொல்லேன்.

ஸுமதி.—ஒன்று மில்லை. ஒரு பாட்டின் கடைசி அடி நினைவிற்கு வந்தது. அதை நினைக்கச் சிரிப்பு வந்துவிட்டது.

ஸுகுண:—என்ன அது? அதைச் சொல்லேன் சீக்கிரம்; கேட்போம்.

ஸுமதி:—நினைந்துருகித் திருமாலும் நித்தந்தன் வாழ்க்கையை
நின்றனன் மரமாகவே.

ஸுகுண:—என்ன! என்ன! மாலும் மரமாகி நின்றனனு? என்ன விசித்ர மிது? எதற்காக அவன் மரமானுன்? தன் வாழ்க்கை நினைந்துருகியா? அவன் வாழ்வுக்கு என்ன வந்தது? அகிலாண்டகோடி ப்ரஹ்மாண்ட நாயகனுய் அன்னை லக்ஷ்மீ ஸமேதனுய், அயர்வறு மமரர்கள் அதிபதியாய், அநந்த கருட விஷ்வக்ஸேநாதி ஸூரி ஸேவ்யனுய், அரனய னிந்த்ராதி தேவர்களால் ஸ்துதிக் கப்பட்டவனுய், அர வமளியில் அரவிந்தப் பாவையோடு வீற்றிருந்து தனிக் கோல் செலுத்தும் பரமபத நாதனை தேவதேவனுக்கும் வாழ்க்கையில் கவலை என்கிருயே! அவனுக்குக் கவலை யென்ப தொன்றுண்டா? இவ்வார்த்தை எப்படி உன் வாயில் வந்தது? உனக்கென்ன பித்தமா? ப்ராந்தியா? ஸம்ஸார ஸாகரத்தில் வீழ்ந்தலையும் நமக்கல்லவோ கவலையும் கஷ்டமும்? அவனுக் கென்ன கஷ்டம் வந்தது? சொல்.

ஸுமதி:—அப்படிக் கேள் சொல்லுகிறேன். பரமனுக்கு அலர்மகள் அவனி மகள் என்று இரு மனைவியர் உண்டல்லவா? அவர்களுள் மலர்மாது மருவி ஓரிடம் நிலைத்து நில்லாள்; மற்றவள் அசையகில்லாள்.

ஸுகுண:—[சிரித்துக்கொண்டு] ஆம்; சஞ்சல ஸ்வபாவ முள்ளவள் பத்மா; அவள் ஓரிடத்தில் நிலைப்பதேது? பூமி தேவிக்கு அசைவேது? இரண் டும் இல்லை. வாஸ்தவம்தான். இவளை ஓரிடத்தில் நிலைக்கவைப்பதும் கஷ் டம்; அவளைத் திரியச்செய்வதும் கஷ்டம்; இரண்டும் கடினம்தான்.

ஸுமதி:—வினைபுரியும் மைந்தனே விதியினல் உருவிலான்
விடம் சேரும் அரவமளி யாம்.

ஸுகுண:—[இடைமறித்து] பாவம்! பகவான் எப்படித்தான் ஸஹித்துக்கொள்கிறாரோ? மனைவியர் இருவரும் எப்படியிருந்தாலும், பெற்ற பிள்ளை யாவது நாலுபேரிடம் நல்ல பெயரெடுக்கக் கூடாதா? 'அப்பப்பா? மன்மதனா? துர்நிவாரனாயிற்றே!' என்று எல்லாராலும் வசைமொழி கேட்பதல்லது, சிவபிரான் நெற்றிக் கண்ணினால் உருவிழந்து அநங்கனானனல்லவா? சரி; எது எப்படிப்போனாலும் சற்று நேரம் நிம்மதியாகப் படுத்துறங்கலா மென்றால் அமளியாம் விடம் சேரவு 'புஸ் புஸ்' என்று எந்நேரமும் சீறிக்கொண்டும், 'பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்பதுபோல் எந்த ஸமயத்தில் என்ன செய்யுமோ வென்று பயந்துகொண்டுதானே இருக்கும்படி இருக்கும்! தூக்கம்தான் வருமா?

ஸுமதி:—என்ன செய்கிறது? ஸம்ஸார பந்தம் யாரை விட்டது?

நினைப்பதற் கரியதாம் நெடுங்கடற் பள்ளியும் நீணாகப் பகையூர்தியும்
வினைந்துருகி நெடுமாலும் நித்தந்தன் வாழ்க்கையை நின்றனன் மரமாகவே.

கோட்டுக் கால் கட்டிலும் மெத்தென்ற பஞ்ச சயநமும் இல்லாமற் போனாலும், படுக்க நிச்சப்தமாக ஓரிடம் இருக்கக்கூடாதா? இரவென்றும் பகலென்று மில்லாமல் ஸதா ஸர்வகாலமும் 'ஓ' வென்று கர்ஜிக்கும் குரைகடலல்லவோ அவனுக்குப் பள்ளியறை? போகட்டும்; ஏறும் வாஹநமேனும் ஒத்ததாக இருக்கிறதா? தான் சயநித்திருக்கும் ஸர்ப்பத்துக்குப் பகையான கருடன் வாஹநம். எம்பெருமான் கொஞ்சம் அயர்ந்து மறந்தால் ப்ரமாதமாய்விடும். இத்தகைய குடும்ப ஸ்திதியை நினைத்தால் எவரால்தான் உருமாறாதிருக்கமுடியும்?

ஸுகுண:—ஆமாம்; ஞானம்! நாம் ஸேவிக்கும் திருப்பதிகள்தோறும் பகவான் சிலா ரூபமா யல்லவோ ஸேவை ஸாதிக்கிறான்? தன் ஸம்ஸார சிந்தையால் பகவான் கல்லாய்ப் போய்விட்டான் என்று சொன்னாலும் பொருந்தும். அப்படியின்றி ஒரே அடியாகத் தாருவாய் (மரமாய்) விட்டான் என்கிறாயே!

ஸுமதி:—ஏன் இல்லை? தாருவாகவும் ஆயிருக்கிறான். கேள். வடநாட்டில் ஜகந்நாதம் என்னும் க்ஷேத்ரத்தில் பகவான் தாரு ரூபமாகத்தான் ஸேவை ஸாதிக்கிறான். அங்குப் பலபத்ர ஸஹிதனாகக் கண்ணபிரானாக நிற்கிறான். ஸுபத்ரை ஸ்ரீ கண்ணபிரானை நோக்கி, "கண்ணா! உன்னைக் கணமேனும் பிரியாமல் உன்னுடன் நித்யவாஸம் செய்யவேணு மென்ற ஆவலுள்ளவளாக இருக்கிறேன்; அநுக்ரஹிக்கவேண்டும்" என்று ப்ரார்த்தித்தாளாம். அதற்கு வாஸுதேவன், "கலியுகத்தில் உன் விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறேன்" என்று உரைத்தானும். அவள் விருப்பத்தின்படி கண்ணன் ஒருபக்கம் ஸுபத்ரையோடும் ஒருபக்கம் பலபத்ரனோடும் காட்சியளிக்கிறான். இப்படிப் பகவான் தாருவாக ஸேவை ஸாதிக்கிற இடங்கள் பல உண்டு.

ஸுகுண:—சரி; உன் வாக்கில் வந்ததை நிஜமென்று நிரூபித்துக் காட்டிவிட்டாய். இருக்கட்டும். க்ருஷ்ணாவதாரம் என்ன ஸௌலப்யம் நிறைந்த அவ

தாரமடீ ! நீ ரொம்ப ரஸமாய்ச் சொல்லுகிருய். இப்படியே தஸாவதாரங்களை யும் பற்றிக்கொஞ்சம் சொல்லேன் கேட்போம்; கேட்க ஆசையாயிருக்கிறதடீ.

ஸுமதி:—சொல்லுகிறேன் கவனித்துக் கேளம்மா.

ஸ்ரீ மத்ஸ்யாவதாரம்

1 ஆகமங்கள் கொண்டொளித்து அந்தகாளில் சோமுகன்
சாகசச் செயல்கள் செய்யச் சங்கரிக்க வெண்ணியே
மாகடல் கலங்கமச்ச மாகிவந் தரக்கனை
சாகவெய்து வேதமீந்த சக்ரபாணி யல்லவோ !

ஸ்ரீ கூர்மாவதாரம்

2 அன்றுதேவ தானவ ரலைகடல் கடைந்திடக்
குன்றுநீரில் மூழ்கிடாமல் கூர்மமாய தேவனே !
என்றுமுன்னை நம்பினே ரிடர்கெடுக்கு நாதனே !
இன்றெனை மறந்திருப்ப தென்கொலோ வெம்மீசனே !

ஸ்ரீ வராஹாவதாரம்

3 ஏனமாகி மண்மடந்தை யெழிலுகந்த நாதனே !
கானமேகிக் காலிகன்று காத்தகமல பாதனே !
தீனராகு மைவர்துன்பம் தீர்க்கவந்த தூதனே !
ஆனமா வரங்களீந்து ஆட்கொள்வேத கீதனே !

ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதாரம்

4 அந்திவேளை வந்திரண்ய னவினீக்கிச் சிங்கமாய்
வந்தனைசெய் மைந்தனுக்கு வரமளித்த வள்ளலே !
இந்தவேளை யெந்தன்மீ திரக்கமுற் றெருக்கணம்
வந்தருள் தராதவன்ம மென்கொலோவெம் மாயனே !

ஸ்ரீ வாமநாவதாரம்

5 விண்ணவர் குறைதவிர்க்க வேண்டிமாணிக் குறளனுய்
மண்ணவர் திகைப்பச் சென்று மாவலிசெய் வேள்வியில்
மண்ணிரந் தளர்ந்துகந்து மாயமாகத் தாவிப்போய்
விண்ணுமண்ணு முற்றடங்க விம்மிநீண்ட தென்கொலோ !

ஸ்ரீ பரசுராமாவதாரம்

6 துட்டராய வேந்தர்மாள தூயகோ டரிப்படை
இட்டமாகக் கையிலேந்தி யிருநிலத்து மன்னரை
மட்டமாக வீழ்த்திவெற்றி மாலைபூண் டிராமனுய்ச்
சிட்டர்கட் கருள்புரிந்த சீலமென்ன சீலமே !

ஸ்ரீ ராமாவதாரம்

7 குரக்கினப் படைகள்கொண்டு கூற்றமாகித் தானவன்
மரிக்கவே சரந்துரந்து மண்ணில்மாந்த ருய்ந்திட
திரைக்கடல் தனையடைந்துத் தாயவின்னணை சமைத்
திரக்கமேவு மூர்த்தியாகு மினகுலத்தி ராமனே !

ஸ்ரீ பலராமாவதாரம்

8 அண்ணனுகிக் கண்ணனுக்கு அவனிதன்னில் தோன்றியே
வண்ணமாயு லக்கையேந்தி வஞ்சரைத் தொலைத்தவா !
திண்ணமாக வுன்னைநம்பி தீதறுக்க வெண்ணினேன்
அண்ணலேவந் தல்லல்நீக்கி யாதரிக்க வல்லையே.

ஸ்ரீ க்ருஷ்ணவதாரம்

9 பஞ்சவர்க்குத் தூதனுகிப் பாரதங்கை செய்திட
வஞ்சியர்கள் கோவியர்தம் வாஞ்சையை நிறைத்திட
அஞ்சலென் றருள்சுரந்து அன்பருக் களித்திட
கஞ்சனைக் கடிந்துநின்ற கண்ணனுய வண்ணலே !

ஸ்ரீ கல்க்யவதாரம்

10 அண்டர்வேண்டித் தாமளித்த வற்புதப்பு ரவிகொண்
டண்டினேர்க் கிடர்விளைக்கு மற்பரை யழித்திட
தொண்டர்கண் டிறைஞ்சிப்பாடித் தோத்திரங்கள் செய்துமே
கண்டுனைப் பணிந்துபோற்றக் கற்கியாகு மீசனே.

11 மீனமோடு கூர்மமாகி மீண்டுமேன மாகியே
ஆனசிங்க மூர்த்தியாகி யன்றுகோல மாணியாய்
தானுவந்து தரணிதன்னில் தக்கமூவி ராமனுய்
கானலோல னுயகண்ணன் கற்கிதாள் வணங்குவாம்.

12 விண்ணவர் தனைத்துரந்து வேண்டிவந்து பத்தர்பால்
தண்ணருள் சுரந்திடுந் தசாவதார வீசனை
எண்ணரும் மிடுக்கணீங்க வெண்ணிப்பேதை சுந்தரம்
பண்ணரும் தமிழ்செய்மாலை பாடினுள்சீர் நாடியே.

ஶாகுண:—என்ன அழகு ! என்ன அழகு ! ஜந்ம ஸாபல்யம் பெற்றேன். நேரமாகிறது ; போய்வருகிறேன். வந்தநம்.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑌾𑌦𑌿𑌵𑌣𑍍𑌶𑌠𑌕𑍋𑌪 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃

ஸ்ரீ ஆசார்யாப்யுதயம்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. வித்வான் தூப்புல் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ப்ரம்ஹதேஸம்]

48 𑌨𑍃𑌹𑌰𑌿𑌂 𑌵𑌨𑍍𑌦𑌯𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌤𑍍𑌰𑌿𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌂 𑌨𑌿𑌯𑌮𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ।
[illegible] ॥

49 [illegible] ।
[illegible] ॥

50 [illegible] ।
[illegible] ॥

51 [illegible] ।
[illegible] ॥

52 [illegible] ।
[illegible] ॥

53 [illegible] ।
[illegible] ॥

54 [illegible] ।
[illegible] ॥

55 [illegible] ।
[illegible] ॥

56 [illegible] ।
[illegible] ॥

57 [illegible] ।
[illegible] ॥

58 [illegible] ।
[illegible] ॥

59 [illegible] ।
[illegible] ॥

60 [illegible] ।
[illegible] ॥

61 [illegible] ।
[illegible] ॥

62 [illegible] ।
[illegible] ॥

63 [illegible] ।
[illegible] ॥

64 [illegible] ।
[illegible] ॥

65 [illegible] ।
[illegible] ॥

66 [illegible] ।
[illegible] ॥

67 [illegible] ।
[illegible] ॥

68 [illegible] ।
[illegible] ॥

69 [illegible] ।
[illegible] ॥

70 [illegible] ।
[illegible] ॥

71 [illegible] ।
[illegible] ॥

72 [illegible] ।
[illegible] ॥ [தொடரும்]

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஸம்பாதகர்

வங்கீபுரம். ஸ்ரீ. உப. ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமியின் நிர்யாணம்

[ஸ்ரீ. உப. ஜோ. ரங்காசார்ய ஸ்வாமி, ஸ்ரீ கார்யம், ஸ்ரீ அஹோபில மடம், திருவெவ்வுளூர்]

ஸர்வ பூத ஸுஹ்ருத்தாக விளங்கிவந்த வங்கீபுரம் ஸ்ரீ. உப. ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமிக்கு எதிர்பாராமல் திடீரென்று நிர்யாணம் நேர்ந்தது பற்றிய நம் அநுதாபத்தை நம் ஸுஹ்ருத்துக்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இந்த ஸ்வாமி வேதாந்த வித்யைகளில் சிறந்தவராய், 'ஶீலவ்ருத்த ஶாலி' என்றும், 'ந அஸூயிதும் அர்ஹதி யதோக்தோ' என்றும், 'ஸத்வாதிகோ மந்த்ர: ஸர்வம் ஸஹிஷ்யதி' என்றும் சொல்லுகிறபடியே மிகவும் க்யாதியுடன் விளங்கி வந்தா ரென்பது ஜகத்ப்ரஸித்தம். இதோடு பாஷாந்தரத்திலும் இந்த ஸ்வாமிக்கு மிகுந்த ப்ரக்யாதி. இப்போது ஸ்ரீ அஹோபில மடத்தில் 42-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தரா யெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கருடன் சுமார் 30-வர்ஷங்களாகப் பூர்வாச்ரமம் முதல் ஸமாகமம் உண்டு. அப்போது ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமி 'அஹோஸ்ய மஹோ உஹோஸ்ய மஹிமா' என்றும், 'ஸம்ஸாரேஷு க்ஷணாதேவாவிஸ்தம் மஹைவயீ நச்ரணா' என்றும், அந்த

ஸம்பந்தத்தைத் தமக்குப் பரம லாபமாகக் கருதி, அன்று முதல் ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருவுள்ளம் உகக்கும்படியாகவே வர்த்தித்து வந்தார். ஸ்ரீ வேதாந்த தீபிகைக்குப் பல வர்ஷங்கள் ஸம்பாதகராக இருந்து, அப்பத்ரிகை வாயிலாக ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நத்துக்கு மணிப்ரவாள ரூபமான வ்யாக்யாநம் எழுதியும் லோகத்துக்கு உபகரித்திருக்கிறார். ஸ்ரீ அழகிய சிங்கர், தாம் ஸ்தாபித்தருளிய ஸ்ரீ மதுராந்தகம் வேத ப்ரபந்த சாஸ்த்ர பாடசாலை, வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநங்களோடு கூடச் செவ்வையாய் நடக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி, அதன் நிர்வாஹத்துக்காக ஜ்ஞாந சீல வயோ வ்ருத்தரான இந்த ஸ்வாமியை மானேஜராக நியமித்தருள, ஸ்வாமியும் 'யநெ்யாஜ்ஞா' என்று அந்த ஆஜ்ஞையை சிரஸா வஹித்து, 'அடியேனுக்கு வார்த்தக்ய மிருந்தபோதிலும், 'ஊாஹொ ஜொஹஃ ஸ்ரீஉபெஷுவ தவ வூஷாஊாஷெஹாவிது ஷஷெய்ாவ வ்வ ம தா நிஜெ' என்றும், 'வெஷொக்தாஷுயெயஉஎஃ வெஷாஞ நிய தாஷுயெ। தாஜூவ உாஜ ஷஂவூவஷயாஜி வஷ ஊா நாஷ' என்றும், ஸ்ரீ பீஷ்மாசார்யர் பகவானிடம் சொன்னபடி, ஸ்ரீ அழகிய சிங்கருடைய அநுக்ரஹத்தால் நடத்திவருகிறேன்' என்று விஜ்ஞாபித்து, கலாசாலையை அப்படியே ஸரிவர நடத்தி வந்தார். ஸ்ரீ அழகிய சிங்கருடைய ஸம்பந்தம் தமக்கு அத்யந்தம் ஆவச்யகமென்று தமது திருவுள்ளத்தில் தோன்றவே, ஸ்வாமி உடனே ஸ்ரீ அழகிய சிங்கர் ஸந்நிதிக்கு எழுந்தருளி ப்ராயச்சித்த ப்ரபதநத்தைச் செய்துகொண்டார். இந்த ஸ்வாமி, ஸ்வச்சந்தமாக ஸ்ரீ பீஷ்மாசார்யர்போல தக்ஷிணாயநம் வருவதற்கு முன்னடியே, 'சுவிஷ்ராஜஷுஜாஷ தகஷு ஹகஷெ்ாஷகஷு-ஷாஃ உஉாவிஹ உயியாவ' என்று மநோரதித்தபடி திருநாட்டை அடைந்தார் என்னல் தகும். ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியைக்கு இந்த ஸ்வாமி ஸம்பாதகராக இருந்து, அந்தக் கைங்கர்யத்தை ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ளம் உகக்கும்படி நடத்திவந்து, அநர்க்கமான தமது விஷய தாநத்தால் அதை மிகவும் சிறப்பித்திருக்கிறார். 'தஷிஹஷஷ்ய ஹீஷெ களஷவாணாஂ ஊஷஸுஜெ। ஜூாநாநஜீ ஹவிஷ்யஜி' என்கிறபடி, இந்த ஸ்வாமியின் நிர்யாணத்தால் ஸ்ரீ வைஷ்ணவ ஸமுதாயமானது ஒரு மஹானை இழந்துவிட்டது.

* * * * *

[ஸ்ரீ. உப. K. ஸுதர்சநாசார்யன், 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா தொண்டன்',

பெருமாள்கோயில்]

வைதிக லௌகிக வ்யவஹாரங்களில் சிறந்த விச்ராந்த க்யாதியடைந்தவரும், ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்யங்களில் அநுத்தமராயும் எழுந்தருளியிருந்த ஸ்ரீ. உப. ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமி 15-7-49 வெள்ளிக்கிழமையன்று மாம்பலத்திலுள்ள தமது திருமாளிகையில் பரமபதித்தாரென்ற செய்தியை மிக்க வருத்தத்துடன் நமது ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஸஹ்ருதத்துக்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த ஸ்வாமியின் நிர்யாணத்தைப் பற்றித் துக்கிக்காதவர் ஒருவருமிலர். ஜநித்தவர் யாவரும் ஒரு நாள் மரணமடைய

வேண்டியது அநிவார்யமே யாயினும், ஸ்வாமியின் பிரிவாற்றாமையும் பறி கொடுத்தது போன்ற வருத்தமும் இவ்வுலகின்கண் யார்க்கும் ஆசந்த்ரார்க்கம் இருந்துகொண்டேயிருக்கும். சந்த்ராதித்யர்கள்போல் லோக ஜநங்களுக்கு ப்ரகாஶத்தையும் ஹிதத்தையும் ஆஹ்லாதத்தையும் விளைத்து வந்த உத்தம வ்யக்திகள் அஸ்தமந மடைந்தால் எவர் தாம் துக்கிக்காம லிருக்கமுடியும்?

ஸ்வாமியின் கல்யாண குணங்களைப் பற்றியும், அவரது வைதுஷ்யத்தைப் பற்றியும் ச்லாகித்துக் கூறக் கிஞ்கித்ஜ்ஞனான அடியேன் ஸர்வதா அஶக்தன். எனினும் கிஞ்சித் சொல்லவேண்டி ஸம்பவிக்கிறது. ஸ்வாமி ஸ்ரீ ராஜமன்னார் ஸந்நிதியை யடுத்த நாகை அக்ரஹாரத்தில் ஸ்ரீ. உப. வங்கீபுரம் ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமியின் குமாரராய் அவதரித்து, ப்ரஹ்லாதாழ்வான்போல் பிறந்த பொழுது தொடங்கிக் கருவிலே திருவுடையவராய், ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிக துல்யரான தமது பிதாமஹரிடத்தில் பஞ்ச ஸம்ஸ்காராதி ஸகல ஶாஸ்த்ரார்த்தங்களையும் அதிகரித்துப் பரந்யாஸத்தையும் பண்ணிக்கொண்டு, ‘ஶ—ஶ-௦ ஶூகாஶயெஷீாது’ என்கிறபடி தமது ஆசார்யாநுக்ரஹத்தினால் ஸகல ஶாஸ்த்ர பாரங்கதராகி, அதற்கேற்ற அநுஷ்டாநாதி வைராக்ய ஶீலங்களுடன் எழுந்தருளியிருந்து, தாம் அதிகரித்த ஶாஸ்த்ரார்த்தங்களைக் காலக்ஷேப முகத்தால் அநேக ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஸாதித்தருளி அவர்களைத் திருத்திப் பணி கொண்டார்.

ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்ய நிதியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதழகிய சிங்கருக்கு ஸ்வாமியினிடம் பஹு க்ருபை. ஸ்ரீ அழகிய சிங்கருடைய ப்ரஸாதமும் ஸம்பந்தமும் தமக்கு லப்தமாகவேண்டுமென்று கருதியே ஸ்வாமி ஸ்ரீ அழகியசிங்கரை ப்ரார்த்தித்து, அந்த ஸந்நிதியில் ப்ராயச்சித்த ப்ரபதநம் பண்ணிக்கொண்டார்.

ஸ்வாமி வைதிக மார்க்கத்தில் இவ்வளவு யஶஸ்ஸை அடைந்திருக்கையிலும், லௌகிகத்திலும் பஹு ப்ரமுகராக எழுந்தருளியிருந்தார். பால்யத்தில் பாஷாந்தராப்யாஸம் பண்ணி B. A., L. T., பட்டம் பெற்று, சென்னை ராயப்பேட்டை வெஸ்லி காலெஜில் சில காலம் விஜ்ஞாந ஶாஸ்த்ரப் பேராசிரியராகவும் (Science Lucturer), சில காலம் தலைமையாசிரியர் (Head Master) பதவி வஹித்தும், த்ரிகரண சுத்தியுடன் அங்கு உத்யோகம் செய்து வந்தார். ஸ்வாமி உத்யோகம் செய்து வந்த காலத்தில், ஸ்வாமியின் ஆர்ஜவ குணமும், கற்பிக்கும் திறனும், நிஷ்பக்ஷபாதத் தன்மையும், கல்லூரி ஆசிரியர்களிடம் ஸ்வாமி காட்டிவந்த பேரன்பும், இவற்றினடியாக அதிகாரிகளுக்கு ஸ்வாமியினிடம் ஏற்பட்டிருந்த கௌரவமும் அளவிறந்தன. இக்குணங்களைக் கொண்டு ஆசிரியர்களின் மனத்தை ஸ்வாமி கொள்ளை கொண்டார். ஸ்வாமியின் குணங்களை நேரிற்கண்டு பெரு வியப்புக் கொண்ட கல்லூரி ஸர்வாதிகாரியான வெள்ளையர்கள், கல்லூரியின் ஸகல பாரங்களையும் ஸ்வாமியினிடமே ஒப்பித்து நிர்ப்பராரானார்கள். ஸ்வாமி அக்கலாசாலை நடவடிக்கைகளை அதிகாரிகள் வியப்புறுமாறு நடத்தி வந்தார். ஸ்வாமி அக்கல்லூரியை விட்டு விலகின

189262

பின்னரும், அக்கல்லூரியை ஒழுங்குபட நடத்தவேண்டிய விதங்களையும், கல்லூரி ஸம்பந்தமான த்ரவ்யார்ஜந வ்யய விஷயங்களையும் அதிகாரிகள் பல காலம் ஸ்வாமியினிடமே ஒப்பித்திருந்தார்கள். சிலகாலம் கழித்து அதிலிருந்தும் ஸ்வாமி விரதரான பின்பு, 'இப்படிப்பட்ட வ்யக்தியை விட்டுவிட நேர்ந்ததே!' யென்று அவ்வெள்ளையர்கள் ஸங்கடப்பட்டார்கள். அடியேன் அக்காலத்தில் ஸ்வாமியின் தொண்டனாய் அக்கல்லூரியில் தமிழாசிரியனாயிருந்து நேரில் அநுபவித்த விஷயங்கள் இவை.

நைஸர்க்கிகமாகவே கல்வித்துறையில் மிகுந்த ஊக்கங்கொண்ட நமது ஸ்வாமி, மாம்பலத்தில் சில ப்ரமுகர்களின் வேண்டுகோளுக் கிணங்கி மாணவர்கள் பயில்வதற்கெனச் சில ஆண்டுகள் முன்னர் ஒரு சிறு பள்ளிக்கூடத்தை நிறுவினர். தாம் ஸம்பந்தப்பட்டவை யாவற்றையும் சிறப்பிக்கச் செய்யும் இயல்பினரான நமது ஸ்வாமியின் உழைப்பினாலும் உலையா முயற்சியாலும் திண்மையான கண்காணிப்பினாலும் அப்பள்ளிக்கூடம் வெகு விரைவில் உத்தரோத்தரம் அபிவ்ருத்த மடைந்து, இப்பொழுது சென்னை நகரிலேயே சிறந்ததோர் பள்ளியாய் 'ஸ்ரீ ராமக்ருஷ்ண ஹைஹ ஸ்கூல்' என்ற பெயர் பூண்டு பல கிளைகளுடன் திகழ்கின்றது. பெண் குழந்தைகளுக்கு உயர்தரக் கல்வி யளிக்கும் விஷயத்தில் ஸ்வாமி எடுத்துக்கொண்ட பரிச்ரமம் அளவிறந்தது. இப்போது இக்கலாசாலைகள் அளித்துவரும் பயனை மாம்பலம் நகரவாஸிகள் அனைவரும் நன்கறிவர்.

தவிர: இப்பொழுது மயிலாப்பூரில் சிறந்து திகழும் இரண்டு அக்ரஹாரங்களான ஸ்ரீ வேங்கடேச அக்ரஹாரமும் அலர்மேல்மங்கா அக்ரஹாரமும், ஸ்வாமி திருமயிலை ஸ்ரீநிவாஸன் ஸந்நிதியின் தர்மகர்த்தாவாய் எழுந்தருளியிருந்த காலத்தில் நிறுவப்பட்டவை.

ஸ்வாமி வய: ப்ரயுக்தமான அபாடவத்தாலோ மாநஸிகமாகவோ ச்ரமத்தை அநுபவிக்க நேர்ந்தாலும், அப்பொழுதும் தம்மை வந்து அடுத்துக் கேட்போர்க்கு எவ்வித ஆநந்தோத்வேகாதிகளையும் அடையாமல் ஸ்திரமான சித்த ஸமாதாநத்தை உடையவராய், சாஸ்த்ரோக்தமான முநி வ்ருத்தியை அநுஷ்டித்துக் கொண்டு 'மஹர்ஷி' என்னும் பிருது பெற்று எழுந்தருளியிருந்தார். சுமார் 2, 3-வரு. காலத்துக்கு முந்தி ஸ்வாமி, தமது பள்ளிக்கூட மானேஜர் பதவியினின்றும் உபரதியை யடைந்து, தமது திருமாளிகையின் பக்கத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ கோதண்டராமனுடைய கல்யாண குணங்களை மாநஸிகமாகவும் காயிகமாகவும் அநுபவித்து, ஸ்ரீ பீஷ்மாசார்யர் போல் பகவானிடம் அர்ப்பிதமான மநோ வாக் காயங்களை உடையவராய், இந்தக் கர்ம சரீரத்தை த்யஜித்துவிட்டு ஸாக்ஷாத் ப்ரஹ்ம ஸாயுஜ்யத்தை அடைந்தார்.

ஸ்ரீ வைஷ்ணவ குலத்துக்கே குன்றின் மேலிட்ட விளக்குப்போல் ப்ரகாசித்து வந்த இம்மஹானுடைய நிர்யாணத்தால் சோகப்படுபவர் பலருளர்.

வைதுஷ்யத்தைப் பற்றி ச்லாகித்துப் பேசுபவர் பலர். கேவலம் ப்ராசீந பாண்டித்ய மின்றிக்கே நவீநமான குணதோஷ விமர்ஸ ரீதியில் சிறந்தவ ரென்று சொல்பவர் பலர். பாஷாந்தர பாடத்திலும் காலக்ஷேப ப்ரவசநத் திலும் மஹா பாடவம் பெற்றவ ரென்று ஆநந்திப்பவர் பலர். உபய வேதாந் தங்களிலும் துல்யமான யோக்யதை வாய்ந்தவ ரென்று கூறுபவர் பலர். நமது தேஸீயர்களான லௌகிக ப்ரபுக்கள் மாத்ர மல்லாது குணபக்ஷபாதிக ளான பாச்சாத்யர்களும் கொண்டாடும்படியான பெருமை பெற்றவ ரென்று வியப்பவர் பலர். இப்படி ஸ்வாமி பலவித புகழுக்குப் பாத்ரமாயிருக்கையிலும் ச்லாக்யதமமான கல்யாண குணமொன்று இவரிடம் குடிகொண்டிருந்தது. அது ஆர்ஜவ மென்னும் மஹாகுணமே. ஸ்வாமியின் வாழ்நாளில் ஸர்வதேஸ ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் இந்த ஆர்ஜவ குணம் ஸ்வாமியை விட்டு விலகினதே யில்லை. ஸ்வாமி ஒருவனிடம் ப்ரீதி பாராட்டினல் அது ஹார்த்த மான ப்ரீதியே; 'ப்ரத்யக்ஷத்தில் ப்ரீதி, பரோக்ஷத்தில் ஔதாஸிந்யம்' என்றிரா மல், யதாஸக்தி அவனுக்கு ச்ரேயஸ்ஸை ஸம்பாதித்துக் கொடுப்பதிலேயே ப்ரயத்நப்படும் ஸ்வபாவ முள்ளவர். இதனை ஸ்ரீ ராமக்ருஷ்ண கலாசாலாசிரி யர்களும், ஸ்ரீ மதுராந்தகம் ஸாஸ்த்ர கலாத்யக்ஷர்களும், மற்றும் அத்யாத்ம ஸாஸ்த்ர விஷயங்களை அதிகரித்த ஏனையோரும் நன்குணர்வர்.

பூர்வம் 1911-ம் ஹூ. ஸ்ரீ அஹோபில மடத்து ஸிஷ்யஸபை யென்று ஒன்றை ஆரம்பித்து, அதன் சார்பில் அநேக இடங்களில் ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸங்கங்கள் நடத்தியும், 'ஸ்ரீ வேதாந்த தீபிகை' என்ற ஸஞ்சிகை யொன்றை நடத்திக்கொண்டும், அதன் வாயிலாக அநேக சாஸ்த்ர விசாரங்களை வெளி யிட்டு வந்தார். அப் பத்ரிகை ஸுமார் 25 வர்ஷ காலங்களுக்குப் பிறகு காலக்ரமேண நின்றுவிட்டது. பின், பரமோதாரரான ப்ரக்ருத ஸ்ரீ அழகிய சிங்கர் நம் ஸம்ப்ரதாயம் தழைப்பதற்கென்று ஒரு பத்ரிகை இருக்கவேண்டு வது அவச்ய மென்றும், அதைத் திறம்பட நடத்துவதற்கு ஸ்வாமியே தகுந்த அதிகாரி யென்றும் திருவுள்ளம்பற்றி, ஸ்வாமியைக்கொண்டு "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" பத்ரிகையையும், ஸ்ரீ மதுராந்தகத்தில் அநுக்ரஹித்தருளிய ஸாஸ்த்ர பாடசாலைக்கு மானேஜராயு மிருந்து நடத்தும்படி நியமித்தருளினர். இவை இதுகாறும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அநுக்ரஹத்தாலும் ஸ்ரீ அழகியசிங்கரின் பரம க்ருபையாலும், ஸ்வாமி ஸம்பந்தத்தால் ஸாகோபஸாகமாய் வ்ருத்தி யாய்க்கொண்டிருக்கின்றன. இப்பொழுது ஸ்வாமி பரமபதித்த பிறகு, இவை தாயிழந்த ப்ரஜைபோல் ஆயின. இனி, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸங்கல்பம் எவ்விதமோ அறியோம். இப்படிப்பட்ட ஜ்ஞாதாவின் வியோகம் ஸ்ரீ வைஷ் ணவ உலகிற்கே அஸஹ்யமா யிருக்கும்போது, அவருடைய புத்ராதிகளுக்கும் பந்து வர்க்கங்களுக்கும் கேட்பானேன்? ஸ்ரீ ஸரண்யன் அருள் புரிக.

"பரவலரும் கொடைக்குநின்றன் பனிக்குடைக்கும்
பொறைக்குநெடும் பண்புதோற்ற
கரவலரும் கற்பகமு முடுபதியும் கடலிடமும் களித்துவாழப்

புரவலர்தம் புரவலனே பொய்ப்பகையே மெய்க்கணியே
புகழின்வாழ்வே
இரவலரும் நல்லறமும் யானுமினி யென்படதீத் தேகினையே''
[கம். ராமா. ஆரண்ய காண்டம்: சடாயு காண்படலம் 21]

என்று ஜடாயுஸ், தசரத சக்ரவர்த்தியின் ஸ்வர்க்க லோக ப்ராப்தியைக் கேட்டு ப்ரலாபித்த கம்பநாடர் பாசுரம், ஸ்வாமி நிர்யாண விஷயத்தில் அடியேற்கு ஞாபகம் வருகிறது.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விரோதி ஸூ. ஆவணி (ஸிம்ஹ) மீ. ஆகஸ்ட்-ஸெப்டம்பர் 49.

17—8—49	1உ	புதன்கிழமை	...	அதிதி: ஸ்ரீஜயந்தீ
18—8—49	2உ	வியாழக்கிழமை	...	ஸிம்ஹ க்ருஷ்ண நவமி திதி; பாஞ்சராத்ர ஸ்ரீஜயந்தீ
19—8—49	3உ	வெள்ளிக்கிழமை	...	தஸமி திதி
20—8—49	4உ	சனிக்கிழமை	...	ஏகாதசி திதி: ஸர்வ ஏகாசி
21—8—49	5உ	ஞாயிற்றுக்கிழமை	...	த்வாதசி—த்ரயோதசி திதி த்வயம்
22—8—49	6உ	திங்கட்கிழமை	...	சதுர்த்தசி திதி
23—8—49	7உ	செவ்வாய்க்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை
27—8—49	11உ	சனிக்கிழமை	...	ஸாமோபாகர்மம்
28—8—49	12உ	ஞாயிற்றுக்கிழமை	...	ரிஷி பஞ்சமி
1—9—49	16உ	வியாழக்கிழமை	...	நவமி திதி
2—9—49	17உ	வெள்ளிக்கிழமை	...	தஸமி—ஏகாதசி திதி த்வயம்
3—9—49	18உ	சனிக்கிழமை	...	த்வாதசி திதி: ஸர்வ (பரிவர்த்தந) ஏகாதசி (வ்ரதம்)
4—9—49	19உ	ஞாயிற்றுக்கிழமை	...	த்ரயோதசி திதி: முநித்ரய ஶ்ரவண த்வாதசி
5—9—49	20உ	திங்கட்கிழமை	...	சதுர்த்தசி திதி
6—9—49	21உ	செவ்வாய்க்கிழமை	...	அதிதி
7—9—49	22உ	புதன்கிழமை	...	பூர்ணிமா திதி
8—9—49	23உ	வியாழக்கிழமை	...	மஹாலய பக்ஷாரம்பம்
12—9—49	27உ	திங்கட்கிழமை	...	மஹா பரணி
15—9—49	30உ	வியாழக்கிழமை	...	ஸிம்ஹ க்ருஷ்ண அஷ்டமி திதி: மத்யாஷ்டமி;
16—9—49	31உ	வெள்ளிக்கிழமை	...	சூந்யதிதி; மஹாவ்யதீபாதம்: ஷடஸீதி: கந்யா ரவி 38–5 [இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

ஸ்ரீ தில்லஸ்தாநம் ஸ்வாமியின் ஸங்கல்ப மஹோத்ஸவம்

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம தில்லஸ்தாநம் ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகனுடைய ஸங்கல்ப மஹோத்ஸவம், நிகழும் விரோதிஹு ஆனிமீ 27உ (10—7—49) ஞாயிற்றுக்கிழமை, பெங்களூர் துளஸி தோட்டம் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் திருவடி வாரத்தில் ஸம்ருத்தமாக நடைபெற்றது. அன்று காலையில் ஸ்ரீ ஸ்வாமியின் திருவடி ஸம்பந்தம் பெற்ற பல ப்ரமுகர்களும் வித்வான்களும் மைஸூர் முதலான ப்ரதேசங்களிலிருந்து எழுந்தருளி ஸந்நிஹிதர்களாக இருந்து அந்த மஹோத்ஸவத்தை ஸேவித்து க்ருதார்த்ததையை அடைந்தார்கள். மஹோத்ஸவாநந்தரம் சுமார் 200 திருநாமங்களுக்குத் ததீயாராதநம் ஸம்ப்ரமமாக நடந்தேறியது.

> "நாதனை நரசிங்கனை நவின் றேத்துவார்க ளுழக்கிய
> பாததூளி படுதலாலிவ் வுலகம் பாக்கியம் செய்ததே."

> "தலைவணக்கிக் கைகூப்பி யேத்தவல்லார்
> திரிதலால் தவமுடைத்தித் தரணிதானே."

என்னும் அருளிச்செயல்களின்படி, ஸ்ரீ ஸ்வாமி செயல் நன்றாக எம்மைத் திருத்திப் பணிகொள்ளும் பொருட்டு,

> "திருப்பதிகள் நூற்றேழும் தொழுது செய்ய
> திருவணைக்கும் பனிவரைக்கு மிடையே நின்ற
> திருப்பதியைப் பல்வேறு நலமாருந் தம்
> திருவடியின் துகளாரப் புனித மாக்கி"

ப்ரக்ருதம் பெங்களூர் எழுந்தருளி இம்மஹோத்ஸவம் கண்டருளினது எங்கள் பாக்ய விசேஷமேயாகும். 'ஸ்வபாவத்தாலே அதி ரமணீயமா யிருக்கும் சித்ரகூட பர்வதம், ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் எழுந்தருளினதால் பின்னும் மிக்க ஸோபையை யடைந்தது' என்று ஸ்ரீ வால்மீகி பகவான் அருளிய பொன்மொழி, ப்ரக்ருதம் ஸ்ரீ ஸ்வாமி எழுந்தருளி யிருக்கும் பெங்களூர் விஷயத்தில் அந்வர்த்தமாயுள்ளதென்று கூறுதல் மிகையாகாது. தாபத்ரயத்தால் நொந்து ஸம்ஸாரார்ணவ மக்நர்களான ஜநங்களைப் பார்த்து ஜாதநிர்வேதராய், அந்தத் தாபங்களிலிருந்து அவர்களை விமோசநம் செய்வதையே தமது முக்ய தர்மமாகக் கொண்டு, ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்தைப் பரவச் செய்வதற் குரிய வ்யாபாரங்களையே பல்காலும் தமது பேருகச் செய்துவரும் ஸ்ரீ ஸ்வாமி, இந்த விபூதியில் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருக்கும்படி ஸ்ரீமந்நாராயணன் ஸங்கல்பிக்க வேணுமென்று அவனை ப்ரார்த்திக்கிறேன்.

ரங்கநாத தாஸன்,

[பெங்களூர்]

* * * *

பாதூர் அக்ரஹாரத்தில் ஸத்கதா ப்ரவசநங்கள்

பாதூர் அக்ரஹாரத்தில் அநாவ்ருஷ்டியால் பீடிக்கப்பட்டிருந்த ஸஸ்யாதிகளுடைய க்ஷேமத்திற்காக அக்ரஹார வாஸிகளான ஸ்வாமிகளுடைய ப்ரார்த்தனையின்பேரில்

5—5—49 முதல் ஸ்ரீ மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத கலாசாலே வ்யாகரணத்யாபகர் வித்வான் புராணம் பாதூர் ஸ்ரீ. உப. ராகவாசார்ய ஸ்வாமி, மீமாம்ஸாத்யாபகர் வித்வான் பாதூர் ஸ்ரீ. உப. கோபாலாசார்ய ஸ்வாமி, இவர்களால் விராட பர்வ புராண படந கதா ப்ரவசநங்கள் உபக்ரமிக்கப்பட்டு, உத்தரா கல்யாண பர்யந்தம் வெகு அழகாக ச்லாகிக்கத்தகுந்த முறையில் நடத்தப்பட்டன. கடைசி தினமான 25—5—49 உத்தரா விவாஹத்தன்று அக்ரஹார மஹா ஜநங்கள் ஷை வித்வான்களை யதாசக்தி க்ருதஜ்ஞதாநுஸந்தாநத்துடன் கௌரவித்தார்கள். ஷை கதா ப்ரவசநத்தின் முடிவில் ஸ்ரீ பூரண்ய னுடைய க்ருபையால் நல்ல மழை பெய்தது குறிப்பிடத்தக்கது.

ஷை பாதூர் அக்ரஹாரத்தில் 26-5-49 முதல், அக்ரஹார வாஸிகளான ஸ்வாமிகளின் ப்ரார்த்தனையின் பேரில், வித்வான் புராணம் ஸ்ரீ. உப. ராகவாசார்ய ஸ்வாமி, கோபாலாசார்ய ஸ்வாமி, இவர்களால் ஸ்ரீமத் வால்மீகி ராமாயண கதா ப்ரவசநமானது உபக்ரமிக்கப்பட்டது. ஷை கதா ப்ரவசந காலத்தில், ஸ்ரீ மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத கலாசாலேயிருந்து சென்னை ஸர்வகலாசாலே சிரோமணி உத்தர பரீக்ஷைக்கு அனுப்பப்பட்டு இரண்டாவது வகுப்பில உத்தீர்ணரான பாதூர் வ்யாகரண சிரோமணி P. K. ராமபத்ர சிரோமணியால் நல்ல சாரீரத்துடன் மூல படநம் செய்யப்பட்டு ஷை வித்வான்களால் விசேஷார்த்தங்களுடன் ஜநமநோரஞ்ஜகமான ரீதியில் வெகு அழகாக உபந்யஸிக்கப்பட்டது. 15—6—49 ஸீதா விவாஹ வட்டத்துடன் ஷை கதா ப்ரவசநமானது பூர்த்தியடைந்தது. ஸீதா விவாஹ காலத்தில் ஷை ஸ்வாமிகளுக்கு யதாசக்தி ஸம்பாவனைகள் செய்யப்பட்டன.

இம்மாதிரி வித்வான்களுடைய ப்ரவசநங்களுக்கு மூலகாரணமாக வுள்ள ஸ்ரீ அழகிய சிங்கருக்கு அநந்த ப்ரணமங்களை ஸமர்ப்பிப்பதுடன், இதுபோல் அடிக்கடி அநேக வித்வான்களைக் கொண்டு அக்ரஹாரங்களில் ஸத்கதா ப்ரவசநங்களையும் ஸம்ப்ரதாய விஷயங்களையும் உபந்யஸிக்குமாறு அநுக்ரஹிக்க வேண்டு மென்றும் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸந்நிதியில் அக்ரஹார வாஸிகளால் ப்ரார்த்திக்கப்பட்டது. அவகாசம் ஏற்பட்ட போது எழுந்தருளி ஸ்ரீராம பட்டாபிஷேக பர்யந்தம் ஷை ராமாயண கதா ப்ரவசநத்தைப் பூர்த்தி செய்து நடத்திக் கொடுக்கவேணு மென்று ஷை ஸ்வாமிகள் ப்ரார்த்திக்கப்பட்டனர்.

பாதூர்,
2—7—49. தூப்புல். வா. ஸ்ரீரங்காசார்யன்.

* * * *

ஸ்ரீமத் கருடபுரம் ஸ்வாமி ஸ்ரீ. ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனின் வர்ஷ திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

நாளது விரோதிஞு ஆடிமீ 26உ (10—8—49) த்வயம் விளைந்த திருப்பதி என்று புகழ்பெற்ற ஸ்ரீ மதுராந்தகத்தில் ஷை ஸ்ரீமத் ஸ்வாமியின் பூர்வாச்ரமத் திருமாளிகையில் திவ்ய ப்ரபந்த வேதபாராயணம் முதலியவற்றுடன் ஷை உத்ஸவம் ஆரம்பித்து ஐந்தாவது நாளாகிய 30உ (14—8—49) சாத்துமறை பாதுகா தீர்த்த விநியோகாதிகளும் ஸம்பாவனையும் நடப்பதாக உத்தேசிக்கப்பட்டு, ஷை மஹோத்ஸவம் கருடபுரம் சின்ன ஸ்வாமி, ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியை முன்னிட்டு நடக்கப்போகிறது.

ஸ்ரீமத் ஸ்வாமி குமாரர்கள்,
தி. ஈ. வரததேசிக தாஸன்,
தி. ஈ. திருமலே தாஸன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

'ஸ்ரீ ந்யாஸ விம்சதி'

வேங்கடாத்ரியகரம் வித்வான் ஸ்ரீ. உப. அநந்தாசார்ய ஸ்வாமியினிடமிருந்து 'ந்யாஸ விம்ஸதி' என்னும் பகவத் ஸ்தோத்ரத்துக்குத் தமிழில் பதவுரையுடனும் சிறியதொரு கருத்துரையுடனும் கூடிய க்ரந்த மொன்றை வரப்பெற்ருேம். இந்த உரைகளில் எதெது அத்யந்தம் விவரணம் செய்யப்படவேண்டியதோ, அதது மாத்ரம் அந்யூநமாயும் அநதிரிக்தமாயும் தெளிவான நடையில் வெளியிடப்பட் டிருக்கின்றது. ஸ்ரீ அநந்தாசார்ய ஸ்வாமி பரிகணிதரான வித்வா ஞனபடியால், அவர் எழுதியிருப்பதில் யாதொரு ஆக்ஷேபார்ஹமான அபிப்ராய ஆவிஷ்காணமும் இருக்கக் காரண மில்லை. மூல ச்லோகங்கள் நாகர லிபியில் அச்சுப் பதிப்பிக்கப்பட் டிருக்கின்றன. இதன் க்ரயம் ரூ. 1—0—0. இக்ரந்தத்தை அபேக்ஷிப்பவர்கள், "ஸ்ரீ. உப. வே. அநந்தாசார்ய ஸ்வாமி, க்ருஷ்ணபுரம்; அக்பராபாத் போஸ்ட், கோடம்ப்ாக்கம், மதராஸ்" என்னும் விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ ந்யாஸ விம்ஸதி என்பது, நமது பரமாசார்ய னென்று கொண்டாடுவதற்கு அதிமாத்ரம் அர்ஹரான ஸ்ரீ வேங்கடநாதன் என்னும் திருநாமங்கொண்ட மஹான், லோகோஜ்ஜீவநார்த்தம் அநுக்ரஹித்தருளிய பற்பல க்ரந்தங்களுள் ஒன்ருகும். ஸரணுகதி வித்யையைப்பற்றிக் கூறும் ந்யாஸ விம்ஸதி என்னும் இக்ரந்தத்தைத் தவிர இம் மஹான், ந்யாஸ தஸகம் ந்யாஸ திலகம் நிக்ஷேபரக்ஷை ஸரணுகதி தீபிகை என்னும் அநேக க்ரந்தங்களை அநுக்ரஹித்திருக்கிருர். இவைகளுடன் நில்லாமல், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் போன்ற சில பெரிய க்ரந்தங்களிலும் இந்த வித்யையைக் குறித்து அநேக ப்ரகாரங்களில் விசாரித்திருக்கிருர். இவ்வாறு ஓரிடத்தில் விசாரிக்கப்பட்ட ஒரு விஷயத்தை மற்ருேரிடத்தில் மறுபடியும் ஸங்க்ரஹமாக விசாரித்து வலியுறுத்துவது இந்த மஹானுடைய வழக்கம். அதிகாரி பேதங்களை உத்தேஸித்தும், ஏற்கெனவே விசாரிக்கப்பட்டதை மறுபடியும் ஸோதிக்கவும், இம்மாதிரி ஒரே விஷயத்தைப் பற்றிப் பற்பல க்ரந்தங்கள் வெளிவருவது முண்டு. ப்ரக்ருதத்தில், இந்த ந்யாஸ விம்ஸதியில் விஸேஷித்து விசாரிக்கப்பட் டிருக்கும் விஷயம், இதற்கு முந்தி அநேக ஸாஸ்த்ர ப்ரமாணங்களைக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டிருப்பது தான். இப்பொழுது அதே விஷயத்தை யுக்தி புரஸ்ஸரமாக ஸ்வாமி இந்த க்ரந்

த்தில் உபபாதித்தருளுகிறார். இந்த க்ரந்தத்தில், ஆறாவது ச்லோகத்தில் ஶரணாகதியின் பெருமையும், ஏழாவதில் அதன் அங்கமான மஹா விச்வாஸம் என்பதின் கருத்தும், எட்டாம் ச்லோகத்தில் ஸக்ருத் ப்ரயோகேண ஒருதரம் அநுஷ்டிக்கப்பட்ட ஶரணாகதி ஒருபொழுதும் வீணாகமாட்டாதென்பதும் பரக்க நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுள் எட்டாவது ச்லோகத்தில் ஒரு விஶேஷித்த அம்ஶம் இருக்கிறபடியால், அது ஆராய்ச்சிக்கு உரியது. ஸாமாந்யமாக இந்த ச்லோகம் பின்வருமாறு படிக்கப்படுகின்றது:—

“நேஹாபிக்ராந்திநாஶோ ஸ்தி விஹதிரிஹ ப்ரத்யவாயோ ஹவேதி
த்ரி-க்ஷும்மிகேஶ-த்ரிநீத்யா ப்ரவத நவிஷயேயோஜிதம் ஶாஸ்த்ரவித்பி:”

[இவ்வாறு அநுஷ்டிக்கப்பட்ட கர்மயோகத்தில், ஆரம்பிக்கப்பட்டதற்குப் பயன் தராமல் வீணாகப்போவதென்பதில்லை. வேறு விதமாக இந்த யோகத்துக்குப் பங்கம் ஏதாவது ஏற்பட்டாலும் அது இந்த உபாயத்தை ப்ரயோஜநமற்றதாகச் செய்துவிடுமென்பதில்லை. இவ்வாறு ஸ்ரீ பகவத் கீதையில் கர்மத்யாகாதி புரஸ்ஸரமாகச் செய்யப்படும் கர்மயோகத்தைப்பற்றி ஸ்ரீ கீதாசார்யன் விசாரித்திருக்கிறார். அம்மாதிரிதான் இந்த ப்ரபதந விஷயமும். இதை ஒரு தடவை தொடங்கி நடுவில் விட்டாலும், வேறுவித கஷ்ட நஷ்டங்கள் ஸம்பவித்தாலும், இந்த ப்ரபதந வித்யை ஒரு தடவை அநுஷ்டிக்கப்பட்டுவிட்டால், இம்மந்த்ரம் விதைக்கப்பட்ட விதையை நீர் பாய்ச்சி முளைக்கவைப்பது போன்றதாகும். மிகச் சிறியதாகிய கர்ம யோகத்திற்கே இப்படிப்பட்ட மஹிமை சொல்லப்பட்டிருக்கும்போது, மிகவும் உயர்ந்ததான ஶரணாகதி மந்த்ரோச்சாரணம் ஒருபொழுதும் வீணாகமாட்டாது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? இதுதான் இந்த ச்லோகத்தின் தாத்பர்யம்.]

இந்த ச்லோகத்தில் ‘விஹதிரிஹ’ என்பது பழம் பாடம். இதை. “இஹ—இந்தக் கர்ம யோகத்தில், விஹதி—ஏதாவது ஒரு பங்கம் (ஸம்பவித்தால்), ப்ரத்யவாயோ ந பவேத்—தோஷம் ஸம்பவிக்கமாட்டாது” என்றிப்படி அந்வயித்துக்கொள்ளவேண்டும். இதிலிருக்கும் க்லேஶத்தை ஆலோசித்து ஸ்ரீ அநந்தாசார்ய ஸ்வாமி “ந ச விஹதிமதி ப்ரத்யவாயோ பவேத்” என்று மாற்றியிருக்கிறார். இதன் பொருள்:—விஹதிமதி—பங்க ஸம்பாவனையையுடைய இந்த யோகத்தில், ந ப்ரத்யவாய:—ஒருவித தோஷத்துக்கும் இடமில்லை. இவ்வாறு அந்வயித்தால் அத்யாஹார ரூபமான க்லேஶம் ஸம்பவிக்கமாட்டாதென்பது ஸ்ரீ அநந்தாசார்ய ஸ்வாமியின் திருவுள்ளம். ஆனால் இந்த ஸ்வாமியின் பாடம் மிகவும் புதியது. இதுபர்யந்தம் இம்மாதிரி ஒரு பாடத்தை வேறொருவரும் ப்ரஸ்தாவிக்கக் காணோம். ஆனால் அந்த க்லேஶம் இருக்கையிலும், மற்றவர்கள் அதைப் பெரிதாய்ப் பாராட்டவில்லையென்னும் காரணத்தைக்கொண்டு மாத்ரம் அதை நிர்த்துஷ்டமென்றும் யதாவஸ்திதம் பரிக்ராஹ்யமென்றும் சொல்வது உசிதமாகுமா? மற்றுமோர் விஷயம்:—ஸ்ரீ தேசிகன் இந்த ச்லோகத்தில் ‘கௌஶல்யநீத்யா’ என்று அநுக்ரஹித்திருக்கிறார். ‘ஶரணாகதிக்கு மஹாவிச்வாஸம் முக்யமான அங்கமாயிற்றே; இது

எளிதில் எல்லாருக்கும் ஸம்பவிக்கமாட்டாதே; ஆகையால் ஶரணாகதியும் குருவான உபாயமென்றே சொல்லவேண்டுமன்றோ?' என்னும் கலக்கம் இதனால் உண்டாகக்கூடும். இதற்கு ஸமாதாநம்:—மஹாவிச்வாஸம் என்பது ச்ரமஸாத்யமான அங்கம்தான். கர்மத்யாக புரஸ்ஸரமாகச் செய்யப்படும் கர்மயோகம் ஸ்வல்பமாக இருந்தாலும், அது ஒருபோதும் அழியாமல் இட்டபடை கற்படையாய் நின்று, அநுகூல காலம் வரும்போது நல்ல புத்தியைக் கொடுத்துக் கர்மயோகத்தைப் பூர்த்தியாகவும், அதை அங்கமாகக்கொண்டு பக்தியோகத்தையும் செய்வித்துப் பயன் தருதல்போல், இந்த மந்த்ரோச்சாரணமும் வீணாகாமல் தகுந்த காலத்தில் ப்ரபத்தியை அநுஷ்டிப்பித்து மோக்ஷத்தைக் கொடுக்கவல்லது என்பது இதன் பொருள். ஆதலால், பகவந்நாம ஸங்கீர்த்தநம் ப்ரபத்தி மந்த்ரோச்சாரணம் முதலிய ஸத்கர்மங்களெல்லாம் கடைசியில் ப்ரபத்தியிலேயே கொண்டுபோய் மூட்டி, அதன் பலமாக மோக்ஷத்தைக் கொடுக்கும். சிறிய இவ்வுபாயங்களே ஒரு பலத்தை ஸாதித்துக் கொடுக்குமென்று ஸித்தித்தால், அந்தப் பலத்தை மிகவும் பெரிதான உபாயம் ஸாதித்துக்கொடுக்குமென்பதில் ஆக்ஷேபமேது? இதைத்தான் கைமுதிகந்யாயமென்று சொல்வார்கள். இதுவே இவ்விடத்தில் சொல்லப்பட்டுள்ள விஷயம்.

*   *   *   *

ஸ்ரீ எம்பார் வைபவம்

சென்ற ஸஞ்சிகையில் ஸ்ரீ பாஷ்யகாரரின் ப்ரபாவத்தைப் பற்றி ஒருவாறு ப்ரஸ்தாவித்திருந்தோம். இரவுக்குச் சந்த்ரனாலேயே ஜ்யோதிஸ் ஏற்பட்டபோதிலும், நக்ஷத்ரம் முதலிய க்ரஹங்களாலும் ஶோபை உண்டாவதுபோல, நம்முடைய ஆசார்ய பரம்பரைக்கு ஸ்ரீ பாஷ்யகாரர் சந்த்ர ஸ்தாநீயரானாலும், அவருடன் கைங்கர்யம் செய்துவந்த இதர ஆசார்யர்களால் விசேஷித்த ஶோபை உண்டாயிருக்கிறதாகையால், அவர்களுள் சிலருடைய ப்ரபாவத்தை யதா ஶக்தி வெளியிடுகிறோம். அவர்களைப்பற்றி நினைக்குங்காலத்தில், பாஷ்யகாரருடைய ஆசார்யர்களான பெரியநம்பி முதலிய மஹாங்களுடையவும், அவருக்கு ப்ராயேண ஸமகாலமாயிருந்த திருக்கச்சிநம்பி, நடாதூராழ்வான், கூரத்தாழ்வான், முதலியாண்டான், எங்களாழ்வான், எம்பார், பட்டர் முதலியவர்களுடையவும், அவருக்குச் சிறிது காலங்கழித்து அவரிடத்தில் ஸாக்ஷாத் சிஷ்ய பாவத்தை அநுபவித்து வந்த கடாம்பியாச்சான், வடுக நம்பி, முதலான மஹான்களுடையவும் பெயர்கள், ஜ்ஞாபகத்துக்கு வருகின்றன. இப்பொழுது இவர்களுள், எம்பாரிடத்தில் ஒருவிதமான பக்ஷபாதம் ஏற்படுகிறபடியால், அவரைப்பற்றி ப்ரஸ்தாவித்துவிட்டு, பிறகு யதாவகாஶம் மற்றவர்களைப்பற்றி ஸங்க்ரஹமாக விஜ்ஞாபித்துக் கொள்கிறோம்.

எம்பார் அவதரித்த காலம் ப்ராயேண ஸ்ரீ பாஷ்யகாரருடைய காலமே. ஸ்ரீ பாஷ்யகாரருடைய மாதாவாயிருந்த பூமிப் பிராட்டியின் ஸஹோதரியாகிய பெரிய பிராட்டியார் எம்பாருடைய மாதா. ஸ்ரீ பாஷ்யகாரருடைய

அவதார காலம் கலியுகத்தில் 4118-க்கு மேல் செல்லாநின்ற பிங்கள வர்ஷம் சித்திரைமீ திருவாதிரை நக்ஷத்ரம். எம்பாருடைய அவதார காலம் க்ரோதந வர்ஷம் தைமீ புநர்வஸு நக்ஷத்ரம்.

மழல மங்கல வாஸியான ஸ்ரீ கமலநயந பட்டர் என்னும் பக்தோத்தமருக்கு இம்மாதிரி ஒரு புத்ரன் அவதரித்திருப்பதைக் கேட்டவுடன் பெரிய திருமலை நம்பி மழலமங்கலம் எழுந்தருளி, கமலநயந பட்டரைக் கொண்டு அந்த ஶிஶுவுக்குக் 'கோவிந்தர்' என்று திருநாமம் சாத்துவித்து உபநயநாதி கல்யாணங்களையும் செய்வித்தார். அதற்குப் பிறகு, தம்முடைய திருத்தமையனாராகிய ஸ்ரீ பாஷ்யகாரர், அப்பொழுது திருப்புட்குழியி லிருக்கும் 'யாதவ ப்ரகாஶன்' என்னும் ஒரு அத்வைத ஸந்யாஸியினிடத்தில் ஶாஸ்த்ராப்யாஸம் செய்து வந்ததைக் கேட்டு, ஸ்ரீ கோவிந்தரும் அவரிடம் போய்ச் சேர்ந்து ஶாஸ்த்ரங்களை அப்யஸித்து வந்தார். ஆனால் யாதவப்ரகாஶன் ச்ருதி வாக்யங்களுக்குச் சொல்லும் அர்த்தங்கள் அநேக இடங்களில் இவர்களுக்கு அபார்த்தங்களாகத் தோன்றினபடியால், அதைப் பஹு ப்ரகாரமாக மர்யாதையை மீறாமல் அவரிடம் விண்ணப்பித்துக்கொண்டும், யாதவப்ரகாஶன் அது கேட்டு அவர்களைக் கோபித்துக்கொண்டானே யொழிய தன்னுடைய தோஷத்தை அறியவில்லை. இது காரணமாக இவர்கள் இருவரிடத்திலும் அவனுக்கு அப்ரீதி ஜநித்து, இருவரையும் 'நீங்கள் நம்மிடம் வாசிப்பதற்குத் தக்கவர் அல்லர்' என்று அவர்களை மிகவும் அந்த ஆசார்யன் அநாதரித்துடன், அவர்களுள் அதிக புத்தி கௌஶலம் பெற்ற ஸ்ரீ ராமாநுஜனைக் கபடத்தினால் மோசம் செய்யும்படி நிச்சயித்து, 'எல்லாரும் கங்கா யாத்ரை செய்து வருவோம்' என்ற ஒரு விஷம ஆலோசனை செய்தான். கோவிந்த பட்டருக்கு இந்த ஆலோசனை தெரியவே, அவருக்கு அது மிக்க வ்யாகூலத்தை உண்டாக்கிற்று. ஒருநாள் விந்த்யாடவியில் ஸ்ரீராமாநுஜரை வழியை விட்டு விலக்கி ஒரு வ்ருக்ஷத்தி னடியில் அழைத்துக்கொண்டு போய், அவரை அங்கு ப்ரமித்து நிற்கும்படி விட்டுவிட்டுப் போய்விட்டான். அப்பொழுது பெருமாளும் பிராட்டியும் எதிர்வந்து நின்று, இவர்களுக்கு ஸஹாயத்தைச் செய்து இவர்களை ஒருவித ச்ரமமு மின்றிக்கே அந்த அடவியிலிருந்து ஸம்ரக்ஷித்து அவர்களை ஆநந்தப்படுத்தினர்.

எம்பாரிடத்தில் ஆத்ம குணம் விசேஷித்துப் ப்ரகாசித்து நின்றது. அவர், 'தான்' என்னும் நினைவு அற்று, தம்முடைய ஆசார்யனே உபாயோபேய மென்று விச்வஸித்து, அவர் திருவடி நிலைகளையே திருவாராதநம் செய்து வருவர். ஆசார்யனைத் தவிர்த்து வேறொருவரிடத்திலும் அவருக்கு அவ்வளவு பக்தி உண்டாக வில்லை. *

* குறிப்பு:—ஸ்ரீ ஸ்வாமி திருநாட்டுக்கு எழுந்தருள்வதற்குப் பூர்வ திநம் இக்குறிப்பு எழுதி அநுக்ரஹிக்கப்பட்டது. மறுதிநம் ஸ்வாமிக்கு நிர்யாணம் நேர்ந்தமையால், இது பூர்த்தி யாவதற்கு அவகாசம் இல்லாமற் போய்விட்டது.

கோ. ஸுதர்சந தாஸன்.

தமிழ்நா... நூலகம்
189262

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா சந்தா வரவு

[21-6-49 முதல் 20-7-49 வரை]

				ரூ.	அ.
15	ஸ்ரீ.	A. G. நரஸிம்மையங்கார், மாதுங்கா, பம்பாய் 47, 48 & 49	...	9	0
28	,,	K. S. நரஸிம்மாசார்யர், மாதுங்கா, பம்பாய் 48 & 49	...	6	0
36	,,	C. A. வெங்கடாசார்யர், நுங்கம்பாக்கம் சென்னை, 47	...	3	0
66	,,	P. V. குப்புஸாமி ஐயங்கார், ஸந்யாஸி க்ராமம் திருநெல்வேலி, 47, 48 & 49	...	9	0
81	,,	K. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மேல்மாம்பலம், 49	...	3	0
82	,,	N. K. ஸ்ரீநிவாஸையங்கார், அனந்தபூர், 49	...	3	0
129	,,	T. K. ஸுந்தரராஜன், ஸ்ரீநிவாஸ நகர், திருவானைக்காவல், 48	...	3	0
140	,,	S. பெருமாள் ரெட்டியார், ஆலந்தூர், பரங்கிமலை, 48, 49	...	6	0
143	,,	T. K. நம்பி ஐயங்கார், மயிலாப்பூர், சென்னை, 48	...	3	0
171	,,	S. N. ரங்காசாரியர், தென்காசி, 48	...	3	0
177	,,	S. A. ராஜகோபாலையங்கார், ஆடுதுறை, 49	...	3	0
178	,,	C. ஜகந்நாதையங்கார், கும்பகோணம், 49	...	3	0
190	,,	R. ஸுந்தரராஜன், மதுரை, 49	...	3	0
193	,,	T.R. ராஜகோபாலையங்கார், Com. Tax Officer, வேலூர், 47, 48 & 49		9	0
195	,,	R. ராமஸ்வாமி ஐயங்கார், ஊர்காம், 49	...	3	0
203	,,	ஸர். S. வரதாசார்யர், புதுடெல்லி, 48, 49	...	6	0
211	,,	B. E. க்ருஷ்ணமாசார்யர், சின்ன காஞ்சீபுரம், 47, 48, 49	...	7	8
226	,,	A. R. நரஸிம்மையங்கார், விருதுநகர், 47, 48	...	6	0
240	,,	ராவ்ஸாஹெப் D. ஸ்ரீநிவாஸையங்கார், நடுவக்கரை, கும்பகோணம், 47, 48	...	6	0
260		T. S. ராஜம்மாள், சங்கரபுரம், பஸவன்குடி, பெங்களூர், 47, 48	...	6	0
264	,,	C. R. க்ருஷ்ணமாசாரியர், அட்வொகெட், கடலூர், 49	...	3	0
357	,,	K. கோபாலஸ்வாமி ஐயங்கார், H. M. திருவிடைமருதூர், 47, 48, 49		9	0
367	,,	ஆயனம் க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மதுராந்தகம், 48	...	3	0
383	,,	R. ஸ்ரீநிவாஸாசார்யர், ஜட்ஜ், புதுக்கோட்டை, 47, 48	...	6	0
389	,,	R. வீராஸாமி ஐயங்கார், தில்லஸ்தானம், 48	...	3	0
402	,,	S. ரங்கம்மாள், திருவல்லிக்கேணி, 48	...	3	0
414	,,	K. D. ராஜகோபாலெங்கார், சிதம்பரம், 48	...	3	0
444	,,	K. ஸ்ரீநிவாஸராகவன், நுங்கம்பாக்கம், சென்னை, 47, 48	...	5	0
452	,,	K. கோபாலன், மானேஜர், 'ஹிந்து' சென்னை, 47, 48	...	6	0
533	,,	வாத்யார் ஸ்ரீரங்காசார்யர், பாதூர், 48	...	3	0
547	,,	A. V. நரஸிம்ஹன், ஸ்ரீ. அ. மடம், கத்வால், N. S. 48, 49	...	4	8
613	,,	S. R. க்ருஷ்ணையர், Banker, பொள்ளாச்சி, 48	...	3	0
617	,,	R. ஜகந்நாதையங்கார், பூனா, 47, 48	...	6	0
624	,,	M. S. கோவிந்தராஜன், கோயம்புத்தூர், 48, 49	...	5	0
770	,,	K. பத்மநாப ஐயங்கார், கடலூர் 48, 49	...	6	0
806	,,	U. திருவேங்கடாசார்யர், விழுப்புரம், 49	...	3	0
807	,,	C. S. ஸ்ரீநிவாஸாசார்யர், Asst Com Tax Officer, விழுப்புரம், 49	...	3	0
837	,,	V. வெங்கடராகவ ரெட்டி, மயிலாப்பூர், சென்னை, 49	...	3	0
844	,,	ஸெக்ரிடரி, ஸ்ரீ கல்யாண ஸுந்தரவல்லி வாசக சாலை, ஸ்ரீ அழகர்கோயில், 49, 50	...	3	0
			மொத்தம் ரூ.	181	0

Regd. M. 4437.

ஸ்ரீ:

தமிழகத்தில் சிறுவர்கட்கும் ஏனையோர்க்கும் வைதிக
லௌகிக வ்யவஹாரங்களைப் போதிப்பதில்
முன்னணியில் நிற்கும்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா.

இது இமய முதல் குமரிவரை ப்ரசுரமாகிவரும் ஒரு மாதப் பத்ரிகை.

இதில் எத்தகைய விளம்பரங்களும் தெளிவாகவும் சுத்தமாகவும்
அழகாகவும் குறைந்த சார்ஜில் செய்துகொடுக்கப்படும்.
விளம்பர விஷயங்களும், அதன் சார்ஜூம்,
கீழே காணப்படும் விலாஸத்துக்கு
அனுப்பப்படவேண்டும்.

விளம்பரங்களுக்கு ஆர்டர்கள் தேவை.

[குறிப்பு] முன் பணம் அனுப்பப்பட்டாலன்றி விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட மாட்டா.

சார்ஜூகளின் விவரம்:—

ராப்பர் வெளிப்புறம்	பக்கம் 1-க்கு	மீ 1-க்கு	ரூ.	20.
,, உட்புறம்	,,	,,	ரூ.	15.
ஸஞ்சிகையின் உட்புறம்	,,	,,	ரூ.	10.

**ஒப்பந்த (CONTRACT) விளம்பரங்களுக்குக் கட்டணம்
இன்னும் குறைவாகும்.**

இங்ஙனம்:

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 2, ஆதியப்ப முதலி தெரு, புரசைவாக்கம், வேப்பேரி, மதராஸ்–7.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Kancheepnram. Edited by S. Vasudevachariar, 22, Mahalakshmi Street, Tyagarayanagar, Madras, and Published by P. S. Srinivasa Desikachariar, No. 2, Audiappa Mudali Street, Purasawakkam, Vepery, Madras - 7.